சிறுபஞ்சமூலம்

அம்சவேணி பெரியண்ணன் உரை



சிறுபஞ்சமூலம்

அம்சவேணி பெரியண்ணன் உரை

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

சிறுபஞ்சமூலம் அம்சவேணி பெரியண்ணன் உரை ❒ அம்சவேணி பெரியண்ணன் ❒பதிப்பு 2019 ❒ பக்கங்கள்: 80 ❒ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❒தொலைபேசி:42070663 ❒ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❒ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.70.00

பதிப்பாளர்: **டாக்டர்.பெ.மயிலவேலன்,**

M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர்.பெ.மயிலவேலன், M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr.P.MAILAVELAN,** M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D. Chennai.

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

SERUPANCHAMULAM HAMSAVENI PERIANNAN URAI ❒ HAMSAVENI PERIANNAN ❒ Edition: 2019 ❒ Pages: 80 ❒ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❒ Phone: 42070663 ❒ Typeset: Latha Computer, Chennai ❒ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs. 70.00**

Publisher: Dr.P.MAILAVELAN,

M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

> "நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
> கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

□ □ □

சிறுபஞ்சமூலம்

விளக்கவுரை

கடவுள் வாழ்த்து

முழுதுஉணர்ந்து மூன்றுஒழித்து மூவாதான் பாதம்
பழுதுஇன்றி ஆற்றப் பணிந்து-முழுதுஏத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க்கு உறுதியா
வெண்பா உரைப்பன் சில.

விளக்கவுரை

'சிறுபஞ்சமூலம்' என்கிற நீதி நூலை தொடங்குவதற்கு முன்பு இதன் ஆசிரியர் காரியாசான் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடலைத் தருகிறார். கடவுளின் பெயரை குறிப்பிடாமல் மூவாதான் என்று இறைவனை இவர் குறிப்பிடுகிறார். எல்லோருக்கும் பொதுவானவன் இறைவன் என்பதால் தத்துவ பெயரை அவர் எல்லா மக்களும், எல்லா மதத்தினரும் ஏற்றுக் கொள்கிற வகையில் இந்த உத்தியை கையாண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

எல்லாவற்றையும் முழுமையாக அறிந்து காமம், கோபம், மயக்கம் ஆகிய மூன்றையும் விட்டொழித்தவன். மூப்பும், பிறப்பும் இல்லாதவன் ஆகிய இறைவன் திருவடிகளைக் குறைகூற இயலாதபடி தவறாமல் பணிந்து வணங்குகிறேன். முழுமையாக அவன் புகழை போற்றி துதிக்கிறேன். இவ்வுலகில் வாழும் உள்ள மனிதர்களுக்கு உயிர்க்கு உறுதியான நன்மை தரும் சில வெண்பாக்களை இச்சிறுபஞ்ச நூலில் கூறுவேன் என்று கடவுள் வாழ்த்துப் பாடலாக ஆசிரியர் இதனை வழங்கியுள்ளார்.

அருஞ்சொற்பொருள்

காமம்-பெண்ணாமை. வெகுளி-கோபம். மயக்கம்-தடுமாற்றம், சஞ்சலம். மூவாதான்-பிறப்பு, இறப்பு, தோற்றம், மறைவு இல்லாத இறைவன் பரம் பொருள்.

நூல்

1. ஒத்தஒழுக்கம் கொலை பொய்புலால் களவோடு
ஒத்த இவைஅல ஓர்நாலிட்டு-ஒத்த
உறுபஞ்ச மூலம்தீர் மாரிபோல் கூறீர்
சிறுபஞ்ச மூலம் சிறந்து.

விளக்கவுரை

மனிதர் மேற்கொண்டொழுக வேண்டிய ஒழுக்கம் நன்னடத்தையே ஆகும். கொல்லுதல், பொய் பேசுதல், ஊன் தின்னல், திருடுதல் என்னும் இவற்றிற்கு நேர் எதிரான அதாவது இவை அல்லாததான் உயிர்க் கொலைபுரியாதிருத் தல். பொய் பேசாதிருத்தல், திருடாதிருத்தல் என்ற நான் காகும். இந்த நான்கோடு உலகை வருத்தும் பசித் துயரைப் போக்குகின்ற மழையைப் போல் இந்த சிறுபஞ்சமூலம் என்னும் நூல் மேலே கூறப்பட்ட தீயகுணங்களை போக்கி உயிர் பிணிக்கு நலம் செய்ய வல்லது. இது அறிவுரைகள் கூறி மக்களை நல்வழிப்படுத்தும் நூல்.

சிறுபஞ்சமூலம் என்பது கண்டங்கத்திரி வேர். சிறுவழுதுணைவேர், சிறுமல்லி வேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் என்னும் ஐந்து வகை வேர்களால் ஆன மூலிகை மருந்து. இது உடல் நோயைப் போக்க வல்லது. அதேபோல சிறுபஞ்சமூலம் என்னும் நூல் மனநோயை நீக்க உயிரை உறுதி செய்யவல்லது. இந்நூலின் லட்சியம் இப்பாடல் மூலம் உணர்த்தப்படுகிறது.

அ.பொ.

ஒத்த-ஏற்றதான. ஒழுக்கம்-நடத்தை. புலால்-இறைச்சி. ஒத்த-இணையான. உறுபஞ்சம்-நாட்டில் உண்டாகும் பஞ்சம். மூலம்-காரணம். மாரி-மழை. கூறுவீர்-கூறுவீராக. சிறுபஞ்சமூலம்-நல் ஒழுக்கத்திற்கு சிறுபஞ்சமூலம் என்னும் ஐந்து வகை வேர்களால் ஆன மருந்து இந்நூல் பாடல்கள் ஒவ்வொன்றும் ஐந்து ஒழுக்க நெறிகளை கூறுவன. (பஞ்சம்-ஐந்து) கொல்லாமை, பொய்மை, புலால் உண் ணாமை, திருடாமை இவற்றுடன் சிறுபஞ்சமூலம் இந்நூலும் கைக்கொள்ளவேண்டியதாகும்.

அருளாளன் பாவம் செய்யமாட்டான்

2. பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருள்உடையான் கண்ணதேஆகும்-அருள்உடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக்கு உய்த்து.

விளக்கவுரை

அருள் உள்ளம் கொண்டவன் பாவம் செய்ய மாட்டான். புறம் கூறமாட்டான். இன்பம் துய்ப்பது செல்வர்களுக்கே அமையும். நல்லொழுக்கம் என்பது இரக்க குணம் உள்ளவர் களிடம் தான் இருக்கும் இரக்க குணம் உள்ளவன் பிறர் பழிப்புக்கு இடமான செயல்களை செய்யமாட்டான். மற்றவர்களுக்கு துன்பம் தரும் பாவ செயல்களை செய்ய மாட்டான். பிறர் மீது பழி கூறவும் மாட்டான். இதனை உணர்த்தும் சிறுபஞ்சமூலம் பாடல் இது.

ஒழுக்கம் என்பது சாத்வீக குணமேலிட்டால் வருவது. சாத்வீக குணம் என்பது முற்பிறவிகளில் செய்த புண்ணியத் தால் அமைவது. சாத்வீககுணம் உள்ளவர்கள் இறைவனுக்கு அருகில் இருப்பவர்கள். பிறரிடம் இரக்க குணம் எதனால் ஏற்படுகிறது...? மற்றவர்களும் தன்னைப் போல் மனிதர்கள் என்று நினைப்பதால் மட்டும் வருவதில்லை. எல்லோரிட மும் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்றுவேதங்கள் கூறுகின்றன.

அதை அறிந்தவன் தான் மெய்ஞானி, சாத்வீக குணத் தால்தான் ஒருவன் ஞானியாகிறான். சாத்வீககுணம் பிறருக்கு எந்தத் தீமையும் செய்யாதவர்களுக்கு வருகிறது. ஆகவே இந்தப் பாடலில் கூறப்பட்ட ஒழுக்கநெறிகளை வாழ்வில் கடைபிடித்து நாம் தெய்வத்திற்கு அருகில் செல்லும் சிறப்பை அடையலாம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

அமிர்து-அமிர்தம் (அமுதம்) பாற்கடலில் கிடைத்தது. சாவா நிலை அளிக்கும் தேவர் உணவு. நற்பு-நன்மை, நட்பு. சேர்-

சேரும்படி. வேந்து-அரசன். சேவகன்-பணியாளன். (அமைச்சர், தளபதி, படைவீரர் எல்லாம் சேவகரே அரசர்க்கு) கற்புடையப் பெண், கற்றடங்கிய மேதை, நல்லநாடு, நட்புடைய அரசன் உண்மையான சேங்கன், ஐந்தும் அமுதத்திற்கு ஒப்பாகும்.

இவர்கள் அமுதம் போன்றவர்கள்

3. கற்புடைய பெண்அமிர்து கற்றடங்கினான் அமிர்து
நற்புடைய நாடமிர்தம் நாட்டுக்கு-நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனும்
ஆகவே செய்யின் அமிர்து.

விளக்கவுரை

கற்பொழுக்கம் உடைய பெண் கணவனுக்கு அமுதம் போன்றவள். அறிவார்ந்த நூல்களைக் கற்று அதன்படி நடப்பவன் உலகுக்கு அமுதம் போன்றவன். நற்பண்புகள் உடைய மக்கள் வாழும் நாடு அந்த நாட்டை ஆளும் மன்னனுக்கு அமுதம் ஆகும். நன்மை தரும் மேகம் அளாவப் பறக்கும் கொடியுடைய வேந்தன் நாட்டு மக்களுக்கு அமுதம் போன்றவன் அவனுக்குச் சேவகம் செய்பவன் தன்கடமை உணர்ந்து நல்லதே செய்வானாகிய அவனும் அம்மன்னனுக்கு அமுதம் போன்றவளே ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

கற்புடைய மனைவி வாய்க்கப் பெற்றவன் மிகப் பெரிய செல்வர்தனைவிட ஐஸ்வர்யம் படைத்தவன் ஆவான். கற்பில்லா மனைவியை மிகப் பெரிய பணக்காரன் அடைந்திருந்தால் அவன் மதிக்கத்தக்கவனாக இருக்க மாட்டான் என்பது நமக்குத் தெரியும். அதேபோல் மக்களுக்கு நன்மை செய்யும் அரசன் குடிமக்களுக்கு அமுதம் போன்றவன். எதிரிகள் அவன் நாட்டை போரில் வெற்றி பெறமுடியாது. குடிமக்களின் எழுச்சி பகைவனை ஓட, ஓட விரட்டி விடும். உண்மையான நன்றி விசுவாசம் உள்ளவர்கள் கிடைப்பது பூர்வ ஜன்ம புண்ணியத்தால் விளைவது. ஆகவே பூர்வ ஜன்மத்தை பற்றி நாம் அறியாத இப்பிறவியலாவது நன்மைகளை செய்ய வேண்டும்.

மற்றவர்களுக்கு எந்த தீமையும் செய்யக்கூடாது நம்மை நம்பியவர்களை எந்த நிலையிலும் கைவிடக்கூடாது. எல்லோரையும் அன்பால் வசப்படுத்த வேண்டும். இப்படி செய்தால் நாம் மற்றவர்களுக்கு அமுதம் ஆவோம். இறைவனுக்கு அருகில் சென்றவர்கள் ஆவோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

ம

சிரிப்புக் கிடமானவை இவை

4. கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டும்
இல்லாதாள் ஏக்கழுத்தம் செய்தலும்-இல்லாதான்
ஒல்லாப் பொருள் இல்லார்க்கு ஈத்தளியான் என்றலும்
நல்லார்கள் கேட்பின் நகை.

விளக்கவுரை

முறையாக ஆசிரியரிடம் கல்வி பெறாமல் ஆய்ந்தறிந்து நூலின் பொருளை அறிந்து விட்டேன் என்ற சொல்வது, இரு காதுகளும் இல்லாத ஒருத்திதான் பேரழகி என்று ஆணவம் கொள்ளுதல், கைப்பொருள் இல்லாதவன் ஏழைகளுக்கு உதவி செய்ததாகக் கூறுதல். தான் இரக்க குணம் என்று சொல்லிக் கொள்வதுதான் ஆகியவை நல்லவர்கள் கேட்டால் சிரிப்பதற்கு இடம் கொடுப்பவை என்று இப்பாடல் கூறுகிறது.

குரு இல்லாமல் எந்த கல்வியும் கற்க முடியாது. அதனால் தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தெய்வத்திற்கு முன்னால் குருவை வைத்து சிறப்பித்துள்ளார்கள். ஆன்மீக கல்வியாக இருந்தாலும் சரி... லௌகிக கல்வியாக இருந்தாலும் சரி... குரு அவசியம் தேவை. மலரில் தேன் சேர்ந்து விட்டால் வண்டு தானாக மலரைத் தேடிவருகிறது. மலர், வண்டைத் தேடிப் போவதில்லை. ஆன்மீக ஞானியாகும் தகுதி ஒருவருக்கு வந்து விட்டால் இறைவனே தகுந்த குருவை

அவரிடம் அனுப்பி வைக்கிறார். அதுபோலவே லௌகிக கல்வியில் நாம் சிறந்து விளங்கவேண்டும் என்ற விதி இருந்தால் ஆசிரியர் நமக்கு அமைவார். ஆனால் குரு இல்லாமல், ஆசிரியர் இல்லாமல் எல்லா நுண்ணறிவையும் நான் பெற்று விட்டேன் கற்றுத் தேர்ந்து விட்டேன் என்று சொல்பவன் நகைப்புக்கு ஆளாவான்.

இருகாதுகள் இல்லாதவள் அழகியாக இருக்கமுடியாது. பொருள் இல்லாதவன் மற்றவர்களுக்கு செல்வம் கொடுத்தேன் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் அவையும் நகைப்பிற்க்கிடமானவை என்று இப்பாடல் அடையாளம் காட்டுகிறது.

அ.பொ.

ஏக்கமுத்தம்-கர்வம். ஒல்லா-பொருந்தி இருக்காத. அளி-அருள். இரக்கம்-நகை, சிரிப்பு, கல்லாதவன் ஆய்வு, காதில்லாதவன் அழகு, வறியவன் ஈகை, தான் ஈகை குணம் உடையோன் எனல் ஆகியவை சிரிப்புக்கிடமானவை.

உழைத்து சிறிதளவாயின் பொருள்தேடு தானே செல்வவளம் வரும்

5. உடம்பொழிய வேண்டின் உயர்தவம் ஆற்றுஈண்டு
இடம்பொழிய வேண்டுமேல் ஈகை-மடம்பொழிய
வேண்டின் அறிமடம் வேண்டேல் பிறர்மனை
ஈண்டின் இயையும் திரு.

விளக்கவுரை

பிறவிப்பிணி ஒழிய வேண்டுமானால் தவம் செய்ய வேண்டும். இவ்வுலக வாழ்வில் புகழுடன் வாழவிரும்பினால் இல்லையென்று வருபவர்களுக்கு கொள்ளத் தன்மையுடன் தருதல் வேண்டும். நல்ல விஷயங்களை ஏற்காத அறியாமை உடையவர்களை கோபிக்காமல் தாமும்அறியாதவர் போலவே அவர்களிடம் நடந்து கொள்ளவேண்டும். அடுத்தவன் மனைவியை விரும்பாமல் இருக்க வேண்டும்.

சிறிதளவாக இருந்தாலும் உழைத்து அதை ஈட்ட வேண்டும். அப்படி செய்தால் செல்வம் பெருகி வரும் இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

இறைக்க இறைக்க ஊற்று சுரக்கிறது. அதேபோல் உழைக்க உழைக்க ஆரம்பத்தில் சிறிதுபோல் தோன்றி செல்வம் பெருகும். மேலும் உழைத்து சம்பாதிக்கும் செல்வம் அதிக வலிமையுடையது. இதை அனுபவரீதியாக அறிந்தவர்களே புரிந்துகொள்ளமுடியும். தவறானவழியில் கோடானு கோடி செல்வம் ஈட்டுபவர்கள் நோயினாலும், உறவினர்களின் துரோகத்தாலும் கடும் இன்னல்களை அனுபவிக்கிறார்கள் என்பது பலருக்கு தெரியாது. ஆகவே, நேர்மையாக உழைத்து பொருள் ஈட்டினால் அது நாளடைவில் பெருகி விடும். கற்புக்கரசியான சீதாபிராட்டியான கவர்ந்த ராவணன் சிவ பக்தனாக இருந்தும் போரில் வீழ்ந்தான். ஆகவே, அமர்ந்தவன் மனைவியை விரும்புவது இழுக்கு என்பதை அறிதல் வேண்டும்.

அ.பொ.

ஆற்று-செய்க. ஈண்டு-இங்கு. பொழிய-புகழால் நிரம்ப. ஈகை-கொடை. மடம்-அறியாமை. அறிமடம்-அறிந்தொழுகல். பிறர்மனை-பிறர்மனைவி. ஈண்புன்-சம்பாதித்தல். இயையும்-பொருந்தும். திரு-செல்வம், தவம், ஈகை, அற்மடம், பிறர் மனை விரும்பாமை, உழைத்து பணம்சேர்தல் ஆகிய ஐந்தும் திரு(செல்வம்)வை பெருக்கும்.

எது எது அழகு?

6. படைதனக்கு யானை வனப்பாகும்-பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்புஆகும்-நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்குஅதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு.

விளக்கவுரை

நால்வகைப் படைகளின் யானைப் படை அழகு பெண்களின் இடைக்கு அதன் மென்மையே அழகு ஒருவனுடைய

நல்லொழுக்கத்திற்கு எந்த நிலையிலும் நடுவு நிலை தவறா திருத்தல் அழகு. அரசனுக்கு நடுநிலை தவறாத சொல்லே அழகாகும். படை வீரர்க்கு பகைவருக்கு அஞ்ஞாத அழ காகும். பாண்டியன் சிறந்த நேர்மையானவனாக இருந்தும் ஆராயாமல் நடுநிலை தவறி கோவலனை கொன்றான். அதனால் அக்கணமே அழிந்தான். ஆகவே, எந்த விஷயமாக இருந்தாலும் நன்கு ஆராய்ந்து உண்மையை அறிந்து தீர்ப்பு சொல்வதே அழகு என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

நுண்மை-மென்மை. நடை-நல்லொழுக்கம். கோடா-வளையாத, மொழி-சொல். சேவகர்-படைவீரர். வாடாத-கெடாத. வன்கண்-வீரம். படைக்கு யானை, இடைக்கு மென்மை, நடைக்கு நாணயம் நல்லார்க்கு செங்கோல் முறைமை, வீரர்க்கு அஞ்சாமை அழகு தரும்.

யார் தலைவன்?

**7. பற்றினான் பற்றற்றான் நூல்தவசி எப்பொருளும்
முற்றினான் ஆகும் முதல்வன் நூல்-பற்றினால்
பாத்துண்பான் பார்ப்பான் பழிஉணர்வான் சான்றவன்
காத்துஉண்பான் காணான் பிணி.**

விளக்கவுரை

எல்லாம் பொருள்களுடன் கலந்திருந்தாலும், அதில் பற்றுவைக்காத இறைவன் அருளிய முதல் நூலை (வேதத்தை) கற்று அதன்படி நடப்பவனே துறவி. அவன் தவத்தை செய் வான். எல்லா பொருள்களையும் முழுமையாக அறிந்து செயல்படுபவன் தலைவன் ஆவான். அந்நூலில் உள்ளதை பிறருக்கு தந்து உதவுபவன் மறையபவன் ஆவான்.

பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் செயல்படுபவன் பெரி யோன் ஆவான். நாக்கு தலைக்கு அடிமையாகாமல் உடலுக்கு நன்மை பயப்பதை உண்டு வாழ்பவன் நோயை வெல்வான். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

தவம் செய்வது, பிறருக்கு உதவுவது, பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் இருப்பது ஆகிய நற்குணங்கள் மனிதனுக்குள்ளே இருக்கும் தெய்வ ஒளியை வெளிப்படுத்தும் வல்லமை உடையது என்பது உட்கருத்து.

அ.பொ.

தவசி-துறவொழுக்கம் கொண்டு பொறிபுலன்கள் அடங்கத் தவம் செய்பவன். முற்றினான்-முழுதாக அறிந்தவன். பாத்து-விருந்தினர் களோடு பகிர்ந்து. பழி-ஏளனம். பிணி-நோய். கற்றறிந்து-பற்றைத் துறந்தவன். துறவி. கற்றறிந்து அடங்கியவன் தலைவன் விருந்தினர்க்கு பகுத்தளித்து வாழ்பவன் மறையவன். பழிக்கு அஞ்சி நடப்பவன் பெரியோன். நல்லுறவு உடல்-உடலைக் காத்துக் கொள்பவன் நோயற்றவன்.

அழகு என்று கூறப்படுபவை

8. கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல்-பண்வனப்புக்
கேட்டார் நன்றுஎன்றல் கிளர்வேந்தன் தன்நாடு
வாட்டான் நன்றுஎன்றல் வனப்பு.

விளக்கவுரை

கண்ணுக்கு அழகு அன்பான பார்வை. காலுக்கு அழகு பிறரிடம் யாசிக்காமல் போகாமல் இருப்பது இசைப் பாடலுக்கு அழகு அதைக் கேட்டவர்கள் மிக அருமை. இனிமை என்று பாராட்டுவது. புகழ் விளங்க அரசாளும் மன்னனுக்கு அழகு இவன் நாட்டு மக்களை வருத்தாமல் நல்லாட்சி புரிபவன் என்று பலராலும் பாராட்டப்படுவது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கண்ணோட்டம்-கண்ணுக்கும், யாசிக்க பிறரிடம் செல்லாமை காலுக்கும், ஆய்வின் முடிவு அறிவுக்கும், இன்னிசை பண்ணுக்கும், நல்லவன் என்று குடிகள் போற்றும் பாராட்டு அரசர்க்கு அழகு தருவனவாம்.

நாக்கு அழியும் இதனால்...

9. கொன்று உண்பான் நாசாம்கொடும் கரிப்போவான் நாசாம்
நன்றுணர்வார் முன்கல்லான் நாவும்சாம்-ஒன்றானும்
கண்டுழி நாச்சாம் கடவான் குடிப்பிறந்தான்
உண்டுழி நாச்சாம் உணர்ந்து.

விளக்கவுரை

ஒரு உயிரைக் கொன்று அதன் இறைச்சியை உண்பவனுடைய நாக்கு அறுபடும். பொய் சாட்சி சொல்பவன் நாக்கு அழுகி விடும். நன்கு கற்றறிந்த பெரியோர்கள் முன்பு கல்வி அறிவில்லாத மூடனுடைய நாக்கு அவர்கள் வினாவுக்கு விடை கூறத் தெரியாத அறியாமையால் செத்துப் போனது போல் அடங்கி கிடக்கும். எந்தவகையிலும் வாக்குத் தவறாத ஒருவன் வாக்குத் தவற வேண்டிய நிலையில் ஒருவனை நேரில் கண்டு விட்டால் அவன் நாக்கும் பேசஎழாது. பேச்சு வராமல் செத்தது போல இருக்கும். இப்பொருளில் இப் பாடல் உள்ளது.

அ.பொ.

கெடும்-தீமை தரும். கரி-பொய்சாட்சி. ஒன்றானும்-எந்தவகையிலும். கண்டுழி-காண நேர்ந்தபோது. கடவான்-வாக்கு தவறாதவன்.

தனக்குத் தானே எமனாகுபவை

10. சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்நீள் கோடு
விலங்கிற்குக் கூற்றம் மயிர்தான்-வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல வசை.

விளக்கவுரை

சிலந்தி பூச்சி முட்டை இட்டவுடனே இறந்து போகும். ஆகவே, சிலந்திக்கு அதன் முட்டையே எமன். மான், யானை போன்ற மிருகங்களுக்கு அதன் கொம்புகளே எமனாகும். கொம்பு, தந்தங்களுக்காக அவை மனிதர்களால் கொல்லப் படுவதால் இவ்வாறு கூறப்பட்டது. வலிமை இல்லாத கவரி

மானுக்கு அதன் மயிரே எமனாகும். கவரிமான் அதன் மயிருக்காகவே கொல்லப்படுவதால் அவ்வாறு கூறப்பட்டது. நண்டுக்கு அதன் குஞ்சுகளோ எமனாகும்.

நண்டு குஞ்சுகள் ஈன்றவுடன் அழிந்து போகும். பறவைகள், விலங்குகள், பூச்சிகள், மனிதர்கள் ஆகியவைக்கு அவர்களின் வாயே அதாவது வாய் சொல்லே என்று வள்ளுவரும் கூறியிருக்கிறார். வரம்பு மீறி பேசும் சொற்கள் உயிருக்கு ஆபத்தையே வரவழைக்கும் என்பது உட்கருத்து. ஆகவே, அடக்கமாக பேசவேண்டும் சபை அறிந்து பேச வேண்டும். நல்லனவற்றையே பேசவேண்டும் என்பதாகும்.

அ.பொ.

சினை-முட்டை. கோடு-கொம்பு. வலம்-வலிமை. மா-கவரி மான். ஞெண்டு-நண்டு. பார்ப்பு-குஞ்சு. நன்று அல்-நல்லதல்லாத. வசை-பழிச்சொல்.

இவை சிரிப்புக்கு இடமானவை

11. நாணிலான் சால்புநடைஇலான் நல்நோன்பும்
ஊணிலான் செய்யும் உதாரதையும்-ஏணிலான்
சேவகமும் செந்தமிழ் தேற்றான் கவிசெய்து
நாவகமே நாடின் நகை.

விளக்கவுரை

பழிபாவம் போனற் தீய செயல்களைச் செய்ய பிறர் கூறம் பழிக்கு வெட்கப்படாதவன், பெருந் தன்மையும், நல்லொழுக்கமும் இல்லாதவன் செய்யும் தவமும், தனக்கே உண்ண சோறில்லாதவன் பிறர்க்கு செய்யும் கொடையும், வலிமை இல்லாதவன் செய்யும் வீரதீர செயல்களும், செந் தமிழில் சிறந்த பயிற்சியும், ஞானமும் இல்லாதவன் கவிபாடு கிறேன் என்று கூறும் இந்த ஐந்தும் சிரிப்புக்கு இடமானவன். பெருந்தன்மை, ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் தவம் இருக்க வேண்டும். அப்படி யென்றால் அந்தப் பண்பு இல்லாதவன் தவம் செய்ய ஏன் முயல்கிறான்? விட்டகுறை,

தொட்ட குறை இருப்பதால்தான் அதனை செய்ய முயல் கிறான். அப்படிப் பட்டவன் தன் தீய குணங்களை மாற்றிக் கொள்ள முயலவேண்டும். அப்போது இறையருள் அவனுக் கும் கிட்டும் என்பது கருத்து.

அ.பொ.

நடை-நன்னடத்தை. நோன்பு-தவம். ஊண்-உணவு. உதாரதை-உபகாரம். ஏண்-வலிமை. சேவகம்-வீரச் செயல். நாவகம்-நாக்கை இடமாகக் கொண்ட பேச்சு. நாடின்-எண்ணிப் பார்த்தால். நகை-சிரிப்பு.

இவை உயிர் கொல்லும் நஞ்சுகள்

12. கோறலும் நஞ்சுஊனைத் துய்த்தல் கொடுநஞ்சு
வேறலும் நஞ்சுமாறு அல்லானைத்-தேறினான்
நீடாங்கு செய்தலும் நஞ்சுஆம் இளம்கிளையை
நாடாதே தீதுஉரையும் நஞ்சு.

விளக்கவுரை

ஒரு உயிரைக் கொல்லுதல், கொன்ற வேறு ஓர் உயிரின் இறைச்சியைத் தின்னுதல். தனக்கு சரிநிகர் சமம் இல்லாதவ னுடன் போரிட்டு அவனை வெற்றிக் கொள்ளுதல், ஒரு செயலைச் செய்யத்தக்கவன் என்று கருதி ஒப்படைத்த அச்செயலை குறித்தபடி முடித்துத தராமல் காலதாமதம் செய்தல், தனக்கு இனையவரான சுற்றத்தாரை காரணமில் லாமல் கோபித்தல் ஆகியவை உயிரைக் கொல்லும் நஞ்சு ஆகும். இபொருளில் இப்பாடல் உள்ளது.

கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும். காரணமில் லாமல் கோபிக்க கூடாது ஒரு உயிரை கொல்லக் கூடாது என்றெல்லாம் கூறப்பட்டது. இந்த நற்குணங்கள் தான் நம்மை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்பவை. இந்த நற்குணங்கள் பூர்வீக புண்ணியத்தால் இயற்கையிலே ஒருவன் அடைகிறான். தற்பேறு, தீமைகள் செய்பவன் வைராக்கியத்தோடு அவற்றை நீக்கி நற்குணங்களைப் பெற

முடியும். ஏனெனில் மனிதன் நிகரற்ற ஆற்றல் வாழ்ந்தவன் ஒரு பசு பொய் சொல்வதில்லை. ஆனால் ஆயுள் முழுவதும் அது பசுபாகவே இருக்கிறது. ஆனால் மனிதன் பொய் சொல் கிறான். திருடுகிறான். ஆனால், அவன் தன்னை வைராக் கியத்தோடு தன்னை மாற்றிக் கொள்ளும் போது மகான் ஆகிறான். ஆகவே, நாம் இப்பிறவியிலேயே அனைத்து நற் குணங்களைப் பெறமுடியும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கோறல்-கொல்லுதல். நஞ்சு-விஷம். ஊன்-சதை. துய்த்தல்-உண்ணல். வேறல்-வெற்றிக் கொள்ளுதல். மாறு அல்லான்-எதிரி இல் லாதவன். தேறினான்-தகுந்தவன் என்று நம்பப்பட்டவன். நீட்டாங்கு-கால நீட்டிப்பு. இளை-சுற்றம். நாடாதே-ஆராயாமல்.

இவை எல்லாம் துன்பம்

13. இடர்இன்னா நட்டார்கண் ஈயாமை இன்னா
தொடர்புஇன்னா நள்ளார்கண் தூயார்ப்-படர்புஇன்னா
கண்டல்அவிர் பூங்கதுப்பினாய் இன்னாதே
கொண்ட விரதம் குறைவு.

விளக்கவுரை

நண்பர்களுக்கு துன்பம் தருவது தீமையாகும். அந்த நண்பர்கள் துன்பம் அடைந்தபோது அதைப் போக்க உதவி செய்யாதிருத்தல் தீமைபயக்கும். நண்பர் அல்லாத பகைவ ரோடு பழகுதல் தீமையைத் தரும். நல்லோர்களின் தொடர்பை கை விடுதல். தீமை தரும். தாழை மலர் அணிந்த அழகிய கூந்தலுடையப் பெண்ணே. இவை எல்லாவற்றிலும் தீயது மேற்கொண்ட செயலை முடிக்காமல் இடையில் கைவிடுதல் ஆகும்.

ஒரு நல்ல செயலை தொடங்கி விட்டு அதை முடிக்கா மல் விடக்கூடாது. வெற்றி... தோல்வியைப் பற்றி கவலைப் படாமல் முழுமூச்சுடன் முயலவேண்டும். பகவத் கீதையில்

அருச்சுனன் வினவுகிறான். கிருஷ்ணன். ஒருவன் யோக நெறியில் கடுமையாக முயல்கிறான். ஆனால், அதிலிருந்து நழுவி விடுகிறான். அப்படிப்பட்டவனின் கதி என்ன ஆகும்? சிதறுண்ட மேகங்களைப்போல் அவன் அழிந்துபோவானா? என்று கேட்கிறான். அதற்கு ஸ்ரீகிருஷ்ணன் பதில் தருகிறார்... அருச்சுனா... அப்படிப்பட்டவன் ஒருபோதும் அழிவதில்லை. நல்ல செயல்களை விடாமல் செய்பவன் அதிலிருந்து நழுவி விழநேர்ந்தாலும் மறுபிறவியில் யோகியர் குலத்தில் பிறப்பான். அங்கிருந்து மீண்டும் தன் நல் முயற்சியைத் தொடர்வான் என்கிறார்.

ஆகவே, எடுத்த செயலை விடாமல் நாம் செய்ய வேண்டும். வெற்றி, தோல்வி, லாபம், நஷ்டம் என்பதை யெல்லாம் பொருட்படுத்தாமல் எடுத்த காரியத்தை எப்படி யாவது முடிக்க வேண்டும் என்ற உறுதியோடு போராடி னால் இறுதியில் வெற்றியே விளையும் என்பது கருத்து. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

இடர்-துன்பம். இன்னா-தீமை. நட்டார்-நண்பர். நன்னார்-நண்பர் அல்லாதவர். தூயார்-பெரியோர்கள். படர்பு-விட்டுப் பிரிதல். கண்டல்-தாழை மலர். அவிர்-விளங்கும். கூடிய-பூங்கதுப்பு. அழகிய-கூந்தல். விரதம்-நோன்பு. செயல்-குறை. நடுவில்-விடுதலை.

இவையே நற்குணங்கள்

**14. கொண்டான் வழிஒழுகல் பெண்மகன் தந்தைக்குத்
தண்டான் வழிஒழுகல் தன்கிளை அஃ்து-அண்டாதே
வேல்வழி வெம்முனை வீடாது மன்நாடு
கோல்வழி வாழ்தல் குணம்.**

விளக்கவுரை

கணவன் சொல்படி நடப்பது மனைவியின் கடமை. மகன் என்பவன் தந்தை சொல்வதை தட்டக்கூடாது. அவன்

வழி நடந்தொழுகு வேண்டு. கொடும் போரில் ஈடுபட்டிருக்கும் அரசனின் படை வீரர்கள் அவனை விட்டு நீங்கிவிடாமல், அரசன் பகைவர்மீது எய்யும் வேல்வழி நின்று பகைவருடன் போர் புரிய வேண்டும். நாட்டின் குடிமக்கள் நாடாளும் அரசனின் கோல்வழி வாழும் குடிமக்களாக இருக்க வேண்டும். இவை அவரவர்க்கான நல்ல குணங்கள் ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

நல்ல குணங்கள் பூர்வ ஜன்ம புண்ணியத்தால் இவ் வறிகையிலே அமைகிறது. கணவன் சொல்லை மீறாத பத்தினிகளுக்கு தெய்வங்களே இறங்கி வந்திருக்கின்றன. சத்தியவானின் உயிரை எமனிடமிருந்தே மீட்டாள் கற்புக் கரசி சாவித்திரி, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற வாக்குப்படி தன் தந்தையின் கட்டளை ஏற்று தாயின் தலையை வெட்டினான் பரசுராமன். ஆகவே, நற்குணங்கள் தான் நம் தெய்வீகத்தை மறைக்கும் திரையை நீக்குகிறது. ஆகவே, மேலே கூறப் பெற்ற நற்குணங்களை நாம் அடைய வேண்டும்.

அ.பொ.

கொண்டான்-கணவன். தண்டான்-தாண்டமாட்டான். கிளை-சுற்றம். அஃதே-அப்படியே. அண்டாது-பகைவரை அண்டிப்போகாமல். வெம்முனை-கொடியப் போர்க்களம். வீடாது-நீங்காது. மன்-அரசன். நாடு-நாட்டு மக்கள். கோல்வழி-ஆட்சி முறைப்படி.

வாழும் முறைமை இது

15. பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்த தீங்குஎண்ணி இருத்தல்-இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வது நன்று.

விளக்கவுரை

தனக்கு ஒருவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் பெருமைக்குரிய செயலாகும். பிறர் தனக்குத்

செய்த தீமையை மறக்க விடாமல் மனத்துள் (பழி வாங்க) நிறைத்துக் கொண்டே இருப்பது சிறுமையாகும். தான் மற்றவர்க்கு செய்த தீமையால் நேர்ந்த பகைமை நீங்க அவரோடு அன்பு கொண்டு வாழ்வதும், பல பொருள் வளம் உடைய செல்வார்கள். சுற்றறிந்த நல்லவர்களான பெரி யோர்கள் பழித்து சிரிக்க இடம் கொடாது வாழ்வதும் ஒன்றாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

பழிவாங்குதல் குணம் சிறுமையாகும். பழி வாங்குவ தால் பகை வளருமே தவிர குற. துரபதன், துரோணராக இருவரும் நண்பர்கள். நான் பெரியவனாகிய அரசன் ஆனால், உனக்கு பாதி ராஜ்ஜியம் தருவேன் என்று துருபதன் சொன்னான். அதேபோல் கால சுழற்சியில் துருபதன் மன்னன் ஆனான். ஆனால், துரோணர் குடும்பம் நடத்த முடியாமல் வறுமையில் இருந்தார். முன்பு நண்பன் சொன்ன வாக்குறுதியை நினைத்துஅப்போது அவளைக் காணச் சென்றார். செல்வத்தில் திளைப்பவனுக்கும், வறுமையில் வாடுபவனுக்கும் நட்பு எப்படி வரும்?

சிறுவயது பேச்சுக்களை வைத்து நீர் வந்திருப்பது சரியல்ல என்ற பொருளில் அவன் அவன் அவமானம் படுத்தினான். அதற்கு பழிவாங்க அருச்சுனனை தயார் செய்து துருபதனை விலங்கிட்டு தன் முன் வரச் செய்தார் துரோணர். அதைப் பகையாக்கி கொண்டு தனி மகன் திரொபதியை பாண்டவர்களுக்கு மணம் முடித்து கொடுத்து போரில் துரோணாரைக் கொன்றான் துருபதன். ஆகவே, பழி வாங்குவதால் தீமையேதான் விளையும். ஒருவர் செய்த தீமையை மறப்பதே நன்மை என்பதை சிறுபஞ்சமூலம் உணர்த்துகிறது.

அ.பொ.

பகைகெட-விரோதம் தணிய. நகை-சிரிப்பு. பிழை-குற்றம். சிறுமை-அற்பம். இழைத்த-செய்த.

இது நன்மை...! இது... தீமை...!

16. கதம்நன்று சான்றாண்மை தீதுகழிய
மதம்நன்று மாண்பில்லார் முன்னார்-விதநன்றால்
கோய்வாயின் கீழ்உயிர்க்கு ஈதுற்றுக் குரைத்தெழுந்த
நாய்வாயுள் நல்ல தசை.

விளக்கவுரை

நற்குணம் இல்லாதவர்களிடம் சினம் கொள்வது நல்லது. அன்பு காட்டுவதும் தீமை. கீழ்மக்களுக்கு தரும உணவு குகைக்கும் நாய் வாய்க்கு கொடுத்தமைக்கு சமமாகும். கடிக்க வரும் நாய்க்கு எலும் சாவப் போட்டால் அது அதை கொண்டுபோய் விடும். கடிக்காது என்பதை குறிப்பதாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கதம்-சினம். சான்றாண்மை-பெருங்குணம். கழிய-மிகுந்த. மாண்பு-வலி. கோய்வாய்-கள் உண்ணும் கலம். கீழ்உயிர்-கீழ்மக்கள். ஈ-கொடுக்கும். துற்று-உணவு. தசை-சதை.

இதுவே பிறவியின் பயன்கள்

17. நட்டாரை ஆக்கிப் பகைபணித்து வைஎயிற்றுப்
பட்டார் அகல்அல்குலார் படிந்து-ஒட்டித்
தொடங்கினார் இல்அகத்து அன்பில் துறவா
உடம்பினான் ஆய பயன்.

விளக்கவுரை

நண்பர்களை நல்ல நிலைக்கு ஆக்கி அவர்களை செல்வர்களாக ஆக்குதல். பகைவர்கள் தலை தூக்காதபடி தாழ்த்துதல், கூரிய பற்களையுடைய, பட்டாடை அணிந்த அகன்ற அங்குலும் உடைய பெண்களோடு சேர்ந்து கூடுதல். தன் சுற்றத்தாரை விட்டு பிரியாமல் வாழ்தல் ஆகிய ஐந்தும் பிறவி எடுத்த பயன் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. பெண்களுடன் கூடுதல் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது நம் பண்பாடு. ஆனால், கவி பட்டாடை உடுத்திய பெண்களோடு கூடுவது பயன் என்கிறார். அழகிய பெண்களை தேர்வு செய்து மணமுடிக்க வேண்டும் என்ற பொருளில் அவர் கூறியிருக்கலாம்.

ஆனாலும் மேலே கூறப்பட்ட நண்பர்களை உயர்த் துதல், உற்றார் உறவினரை நீங்காதிருத்தல். ஆகியவை சிறந் ததுதான். ஆனால்பிறவி எடுத்தன பயன் என்பது நமக் குள்ளே இருக்கும் பரம் பொருளை அறிவது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சிறுபஞ்சமூலம் ஆசிரியர் பிறப்பு, இறப்பு இல்லாத இறைவனை வணங்கியே இவ்விலக்கியத்தை தந்துள்ளார். அந்தப் பரம் பொருளை அடைவது பிறவிப் பயன் என்பதையும் நம் லட்சியமாகக் கொள்ள வேண்டும். விளக்கவுரையின் சிறப்பு இதுவே. இவ்விலக்கியத்தை தந்த கவியின் ஆத்மாவும். இதற்கு வாழ்த்து வழங்கும் என்பதில் ஐயமில்லை. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப் பாடல் உள்ளது.

அ.பொ.

நட்டார்-நண்பர். ஆக்கி-உயர்ந்தவர் ஆகச் செய்து. பணித்து-கீழ்பபடிய செய்து. வை-கூரிய. எயிறு-பல். பட்டார்-பட்டு+ஆர் பட்டாடை அணியப் பெற்ற. அல்குல்-மறைவிடம். படிந்து-சேர்ந்து. ஒட்டி-கூடி. இல்-இல்லம். துறவா-நீங்காத.

இவருக்கு பிறவித் துன்பம் இல்லை

18. பொய்யாமை பொன்பெறினும் கள்ளாமை மெல்லியலார்
வையாமை வார்குழலார் நச்சினும்-நையாமை
ஓர்த்துஉடம்பு பேரும்என்று ஊன்அவாய் உண்ணானேல்
பேர்த்துஉடம்பு கோடல் அரிது.

விளக்கவுரை

பொன்னே கிடைப்பதாக இருந்தாலும் பொய் சொல் லாதிருத்தல், பிறர் பொருளை அபகரித்து திருடாமை, வலிமையற்று, வறுமையில் இருப்பவரை திட்டாமை, நீண்ட கருங்கூந்தல் உடைய பெண்கள் தன்னை விரும்பினாலும்

அவர் விருப்பதற்கு இசையாமல் மனஉறுதியுடன் இருப்பது, தன் உடம்பு மெலிவடையாமல் இருக்க மற்ற உயிரின் தசையை உண்ணாமல் இருப்பது, ஆகிய இக்குணங்களைப் பெற்றவர்க்கு மறுபிறவி கிடையாது. அதனால் துன்பமும் இல்லை. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

முந்தைய பாடலில் அழகிய பெண்களை கூடுவது பிறவிப் பயன் என்று கவி கூறினார். இப்பாடலில் பெண் வலிய வந்தாலும் மனஉறுதியுடன் விலகுவது நன்மை என்கிறார். ஏன் இந்த முரண்பாடு? என நினைக்கலாம். பெண்ணாசை உள்ளவரை பிறவித் தொடரும் என்பது உண்மை. ஆனால், வாழ்க்கையில் பெண் இன்பம் துய்ப்பது சுகம். ஆகவே, இவை இருவேறு வகையான நிலைகள். பிறவிப் பிணி ஒழிய பெண்கள் சகவாசத்தை விட வேண்டும் என்பதே தெளிவான முடிவு. பொய் சொல்லாதிருத்தல், பிற உயிர்களை கொல்லாதிருத்தல் ஆகியவை சாத்வீக குணங்களாகும். இந்த குணங்களை வளர்த்துக் கொண்டு பிறவியை ஒழிப்பதே விவேகமாகும்.

அ.பொ.

கள்ளாமை-திருடாமல் இருத்தல். வார்-நீண்ட. குழல்-கூந்தல். நச்சினும்-விரும்பினாலும். நையாமை-உளம் தளராமை. ஓர்த்து-ஓர்ந்து உணர்ந்த. பேரும்-இளைக்கும். ஊன்-தசை. அவாய்-உண்ணான் ஏல. உண்ணானேல்-உண்ணாதிருப்பான் எனில். பேர்த்து-மீண்டும். உடம்பு-பிறவி. கோடல்-கொள்ளுதல். அரிது-இல்லையாகும். பொய்யாமை, கள்ளாமை, வையாமை, நையாமை, கொல்லாமை ஆகிய ஐந்தையும் மேற்கொள்வோர்க்கு மீண்டும் பிறவி இல்லை.

இவர்கள் மனிதர்கள் அல்ல...
கால்நடைகளான மாடுகளே...!

19. தேவரே கற்றவர் கல்லாதவர் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்-ஆதரே
துன்பம்இலேம் பண்டுயாம் வனப்பு உடையேம்
என்பார் இருகால் எருது.

விளக்கவுரை

அறிவு நூல்களை கற்றுத் தேர்ந்தவர்கள் தேவர்கள் போன்றவர். கற்ற வேண்டியதை கற்காதவர்கள் பிசாசுகள். வயோதிகத்திற்கு முன்பே பாதுகாப்பாக சேமித்து வைத்துக் கொள்ளாதவர்கள் மூடர்கள். முன்பு செல்வம் பெற்று துன்பம் இல்லாமல் வாழ்ந்தோம். அழகுடையவர்களாக இருந்தோம் என்று தற்பெருமை கொள்வார்கள் மனிதர்கள் அல்ல. மாடுகள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

தேருங்கால்-ஆராய்ந்து பார்த்தால். பூதம்-பிராசுகள். செய்யாதார் - சேமிப்பு இல்லாதவர். ஆதர்-அறிவில்லாதவர். பண்டு-முன்பு. வனப்பு - அழகு. எருது-மாடு.

பிறவாமல் இருக்க வேண்டுமா?

20. கள்ளான் சூதுஎன்றும் கழுமான் கரியாரை
நள்ளான் உயிர்இரங்க நாஆடான்-நள்ளான்ஆய்
ஊன்மறுத்துக் கொள்வானேல் உடம்பு எஞ்ஞான்றும்
தான்மறுத்துக் கொள்ளான் தளர்ந்து.

விளக்கவுரை

பிறர் பொருளை திருடக்கூடாது. சூதாட்டம் ஆடக் கூடாது. அழிவற்றகீழ் மக்களுடன் நட்பு கொள்ளக்கூடாது. கேட்போர் வருந்தும்படி கடு சொல் கூறக்கூடாது. ஊன் உண்ணக் கூடாது. இந்த குணங்கள் இருந்தால் ஒருவன் ஒழுக்கத்தில் தவறாமல் இருப்பான். மறுபிறவியும் இவனுக்கு இல்லை என்ற சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

கள்ளான்-திருடமாட்டான். சூது-சூதாட்டம். கழுமான்-கலந்து கொள்ளாதவன். கரியார்-கரி. இருள்-மனஇருள். கரியார்-அறிவற்ற மூடர். நள்ளான்-நட்புக் கொள்ளான். இரங்க-வருந்த. நாஆட-நாககினால் வரும் பேச்சு. நன்னான் ஆய்-விரும்பாதவன் ஆகி. எஞ்ஞான்றும்-எப்போதும். தளர்ந்து-ஒழுக்கம் கெட்டு.

விதைக்காமல் முளைக்கும் விதைகள்

21\. பூவாது காய்க்கும் மரம்உள நன்றறிவார்
மூவாது மூத்மதவர் நூல்வல்லார்-தாவா
விதையாமை நாறுவ வித்துஉள மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

விளக்கவுரை

பூ பூக்காமலேயே சில மரங்களில் காய் காய்ப்பதுண்டு. அத்தி, அரசு, ஆல், பலா மரங்கள் பூட்டதில்லை. காய்க்கும். இதைப் போலவே நன்மை, தீமைகளை அறிந்தவர்கள் இளைஞராக இருந்தாலும் மூத்தவர்களோடு வைத்து மதிக்கத் தகுந்தவர். மாடு கன்றுகள் மேலாதிக்க வேலி கட்டி, விதை விதைக்காமலேயே தானே முளைத்து வாடும் விதைகளும் உண்டு. பேறவை தின்ற காய், கனியின் விதைகள் அவற்றின் எச்சத்தோடு விழுகிற இடத்தில் தானே முளைக்கும்? அதேபோல் மேதைகள் பிறர் உணர்த்தாமலேயே எதையும் உணர்ந்தறிவார்கள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

மூவாது-வயதில் முதிராது. மூத்தவர்-அறிவில் மூத்தவர். தாவா - கெடாமலிருக்க. விதையாமை-விதைக்காமலேயே. நாறுவ-முளைக்கும். வித்து-விதை. மேதை-அறிஞன். உரையாமை-சொல்லாமலே.

பூ பூத்தும் காய்க்காத மரங்கள் இவர்கள்

22\. பூத்தாலும் காயா மரம்உள நன்றறியார்
மூத்தாலும் மூவார் நூல்தேற்றாதார்-பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துஉள பேதைக்கு
உரைத்தாலும் செல்லாது உணர்வு.

விளக்கவுரை

பூவாமல் காய்க்கும் மரங்கள் சில இருப்பது போல பூத்தும் காய்க்காத மரங்களும் உள்ளன. (பாதிரி மரம் பூக்கும் காய்க்காது) அதுபோல் நன்மை, தீமைகளை அறியாதவர் வயதால் மூத்திருந்தாலும் அவர்கள் அறிவாய்

மூத்தவர்களாக கருதப்படமாட்டார்கள். அதேபோல் அறிவு நூல்களை கற்காதவர்கள் நிலையும் அதேதான். பாத்திக் கட்டி ஊன்றி விதைத்தாலும் முளைக்காத சில விதைகள் உள்ளன. அது போல் அறிவற்றவனுக்க ஆயிரம் அறிவுரைகள் கூறினாலும் அவன் காதில் ஏறாது என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அறிவிலியான துரியோதனனுக்கு பீஷ்மர், துரோணர் போன்ற பெரியோர்கள் அறிவுரைகள் கூறினார்கள். ஏன், பகவான் ஸ்ரீகிருஷ்ணரே விஸ்வ ரூபம் காட்டி பங்காளிகள் சொத்தை கொடுத்துவிடு என்று அழிவுறுத்தினார். அவன் கேட்கவில்லை. போரில் மடிந்தான் அறிவற்றவனுக்கு ஆயிரம் அறிவுரை கூறினாலும் ஏறாது. ஏனெனில் பூர்வ ஜன்ம விளையின் விளைவு இது என்பதாகும்.

அ.பொ.

காயா-காய்க்காத. பாத்திப் புதைத்தாலும்-பாத்திகட்டி ஆழ ஊன்றி நட்டாலும். நாறல்-முளைத்தல். பேதை-அறிவில்லாதவன். உணர்வு செல்லாது-அறிவில் ஏறாது.

இளமையிலே தவம் செய்க...

**23. வடிவுஇளமை வாய்த்த வனப்பு வணங்காக்
குடிகுலம் என்றஐந்தும் குறித்து-முடியா
துளங்காக நிலைகாணார் தொக்குஈர் பசுவால்
இளங்கால் துறவா தவர்.**

விளக்கவுரை

தோற்றப் பொலிவு, இளமைப் பருவம். அழகு, எவர்க் கும் தாழாத குலப் பெருமை. குடி சிறப்பு ஆகிய ஐந்தும் பெற்று இன்பம் கய்த்தல் என்பது ஒரு அளவோடு நின்று போகும். நீண்ட காலம் நிலைக்காது. ஆகவே, இளம் பருவத் தில் தவம் செய்யாதவர்கள் முதுமையில் ஒன்றுகூற பாரம் சமக்கும் எருதுகள் போன்றவர்கள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அழகு இளமை நிலையற்றது. ஆகவே, இளமையில் தவம் செய்து உறுதியாக வேண்டும். முதுமை வந்தபிறகு

எதையும் செய்ய உடல்நிலை இடம் தராது. தவம்தான் நம் தெய்வீகத்தை உயர்த்தி கடைசிவரை பேரின்பத்தைத் தரு கிறது. ஆகவே, இளம் உயரிலேயே தவத்தை தொடங்கிவிட வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வடிவு-உருவம். வனப்பு-அழகு. வணங்கா-தாழா. துளங்கா-அழியாத. தொடக்கு-கூடி. ஈர்-இழுக்கின்ற. பசு-எருதைக் குறித்தது. இளங்கால்-இளமையில். துறவாதவர்-தவம் செய்யாதவர்.

இப்பெண்கள் தீயவர்கள்

24. கள்உண்டல் காணில் கணவர்ப்பிரிந்து உறைதல்
வெள்குஇலள் ஆய்பிறர்இல் சேறல்-உள்ளிப்
பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமைத்
திறமது தீப்பெண்ணின் தொழில்.

விளக்கவுரை

ஆராய்ந்து பார்த்தால் கள் குடித்தல், கணவனைப் பிரிந்து வாழ்தல். பெண்மைக்கே உரியதான, வெட்கத்தை விட்டு மற்றவர் வீடு செல்லுதல், மற்றவர்கள் செயல் பற்றி தேவையின்றி தலையிட்டும் பேசுவது, தீயகுணம் உடைய பெண்களோடு நட்பு கொள்வது ஆகியவை தீயப் பெண்கள் இவர்கள் என்பதை அடையாளம் காட்டுபவை என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

உறைதல்-தங்குதல். வெள்கு-வெட்கம். இல்-வீடு. உள்ளி-நினைத்து. பிறர்க்கருமம்-மற்றவர் செயல்கள். ஆராய்தல்-அதுபற்றி பேசுதல். கிளைமை-நட்புடமை. திறம்-தனிக்குணம். தொழில்-செயல்.

ஒழுக்கமுடையவர்களாக வாழுங்கள்

25. பெருங்குணத்தார் சேர்மின் பிறர்பொருள் வௌவல்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்-ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வரும்காலன் திண்ணிதே
வாய்ச்சொல்லே அன்று வழக்கு.

விளக்கவுரை

ஒழுக்கமுடைய சான்றோர்களை சார்ந்து இருங்கள். மற்றவர் பொருளை விரும்பாமல் வாழுங்கள். தீய நட்பை விலக்குங்கள். தீயசொற்களை பேசாதீர்கள். உயிரை கொண்டு போக எமன் நிச்சயமாக வருவான். எமனை வெற்றிக் கொள்வது நம் தெய்வீகத்தை உணர்வது மார்க்கண்டேயன் விஷயத்தில் எமன் தோற்றான் சாவித்திரி விஷயத்தில் எமன் தோற்றான். எமனை தோற்க்கடித்தது எது? பக்தி. ஒழுக்கம் தானே...?

ஆகவே, ஒழுக்கத்துடன் வாழுங்கள் இறைவனைப் பற்றியபடி வாழுங்கள். அந்த இறைவனும் உங்களுக்குள்ளே இருக்கிறான் என்பதை அறியுங்கள். நீங்கள் உடல் அல்ல அந்தப் பரம் பொருளில் கூற்றே என்பதையும் மறவாதீர்கள். இதுவே எமனை வெல்லும் வழி. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

பெருங்குணம்-நல்ல நடத்தையால். கேண்மை-நட்பு. ஒருங் குணர்ந்து-முற்றும் அறிந்து. காமின்-தன்னையே (தீச்சொல் பேசாது). காலன்-எமன். திண்ணிதே-உறுதியாகும். வாய்ச்சொல்-(வெறும்) பேச்சு. வழக்கு-நடைமுறை.

எல்லோரும் எல்லாவற்றையும் செய்ய இயலாது...

26. வான்குருவிக் கூடுஅரசுக்கு வால்உலண்டு கோல்தருதல்
தேன்புரிந்து யார்க்கும் செயல்ஆகா-தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன் என்னார் ஒரோஒருவர்க்கு
ஒல்காது ஒரொன்று படும்.

விளக்கவுரை

தூக்கணாங்குருவி கட்டுகிறகூடு, ஒருவகை எறும்புகள் உண்டாக்கும் செல்வாக்கு, பட்டுப்புழுக்கள் நெய்யும் பட்டு நூல். கோல்புழுவின் கோங்கூடு, தேனீக்கள் அமைக்கும் தேன்கூடு ஆகியவற்றை தானும் செய்யலாம் என்றால் இது

இயலாது. அறிவில் சிறந்தவர்கள் அப்படி செய்ய முயலவும் மாட்டார்கள். ஒவ்வொரு உயிர்க்கும் தனித்திறமை உண்டு. அதை மற்ற உயிர்கள் செய்யஇயலாது என்று சிறுபஞ்சமூலம் உணர்த்துகிறது.

அ.பொ.

வால்-உயர்ந்த. புரிந்து-விரும்பிச் செய்தல். ஆகா-செய்ய முடியாது. தாம்பூரீஇ-தாம் விரும்பி. வாய்ப்பன்-முடியும் என்று. என்னார்-செய்ய முயலார். ஒல்காது-குறையாது. படும்-அமையப் பெறும்.

எடுத்துக்காட்டுக்கள்

27. அறன்நட்டான் நல்நெறிக்கண் நிற்க அடங்காப்
புறன்நட்டான் புல்நெறிப் போகாது-புறன்நட்டான்
கண்டுஎடுத்துக் கள்களவு சூது கருத்தினால்
பண்டுஎடுத்துக் காட்டும் பயின்று.

விளக்கவுரை

நல்ல தருமத்தை விரும்பி நடப்பவன் நல்ல ஒழுக்கப் பாதையில் செல்வான். நல்ல நீதிகளுக்கு அடங்காமல் தீய செயல்களை செய்கிறவன் போகும் பாதையிலே அவன் (நல்லவன்) செல்லமாட்டான். தீய செயல்களை செய்பவன் ஏற்றுக்கொண்டு பழகிய கள், திருட்டு, சூதாட்டம் இவற்றின் (தீய) பலன்களை உலகுக்கு உணர்த்தும் எடுத்துக்காட்டு ஆவான். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

புல்நெறி-தீயொழுக்கம். பண்டு-முன்ற. நட்டான்-விரும்புபவன். நல்நெறி-நல்லொழுக்கம்.

ஆசிரியனுக்கு நோய் போன்ற மாணவர்கள் யார்?

28. ஆண்ஆக்கம் வேண்டாதான் ஆசான் அவர்க்குஇயைந்த
மாணாக்கன் அன்பான் வழிபடுவான்-மாணாக்கன்
கற்புஅனைத்து மூன்றும் கடிந்தான் கடியாதான்
நிற்புஅனைத்து நெஞ்சிற்கோர் நோய்.

விளக்கவுரை

ஆண் ஆக்கம் என்பது ஆண்மைக்குரிய செயல்களில் குறிப்பாக இல்லற வாழ்வு ஏற்று மனைவியிடம் வாழ்தல் ஆகும். அதை விரும்பாமல் பிரம்மச்சர்யம் காப்பவன் ஆசிரியன் ஆவான். பிரம்மச்சர்யம் காப்பவன் எல்லா கலை களையும் எளிதாக அறிவான். இந்த பிரம்மச்சர்யம் காப் பாற்றதால்தான் இன்று எல்லா கலைகளும் அறிந்து கொண் டிருக்கின்றன. பிரம்மச்சர்யம் காப்பவன் ஆசிரியனாகும் தகுதி பெற்றவன் என்பதை அறிய வேண்டும். அத்தகைய ஆசிரியனைத் தேடி பயிலும் மாணவர் இருவகை ஆவார். ஒருவகை ஆசானிடம் அன்பு கொண்டவர்கள். மற்றொரு வகை ஆசானை வழிபடுத்துகிறவர்கள். மாணவர்கள் கல்வி கற்கும் அளவுக்கு காமம், வெகுளி, மயக்கம் மூன்றையும் விட்டொழித்தவர்களாக இருக்க வேண்டும். விட்டொழிக் காதவர்கள் அந்த ஆசிரியனுக்கு நோய் போன்றவள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

ஆசான்-ஆசிரியன். கற்பு அனைத்தும்-கற்கும் வரையினும். மூன்று-காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று.

மாணவன் ஒழுங்குமுறை

29. **நெய்தல் முகிழ்த்துணையாம் குடுமி நேர்மயிர்
உய்தல் ஒருதிங்கள் நாளாகும்-செய்தல்
நுணங்குநூல் ஓதுதல் கேட்டல் மாணாக்கர்
வணங்கி வலம்கொண்டு வந்து.**

விளக்கவுரை

பாடம் கற்கும் மாணவனின் தலைமயிர்க் குடுமி கரு நெய்தல் மொட்டின் அளவுடையதாக இருக்க வேண்டும். அவன் அக்குடுமியை கழுவாது இருத்தல் ஒருமாத கால மாகும். மாணவன் செய்யவேண்டியது ஆசிரியனை வலமாக வந்து வணங்கி படித்தலும், ஆசிரியன் சொல்வதை கேட் பதும் ஆகும். ஆசான் என்றாலும் குரு என்றாலும் பொருள்

ஒன்றுதான் குருபக்தி என்பது மாணவனுக்கு அனைத்து ஆற்றல்களையும் தரவல்லது. தற்கால உலகில் கல்வியை வியாபாரம் ஆக்கி குருவுக்குள்ள மரியாதை அதன் பாதாளத் திற்கு போய் விட்டது. அதனால்தான் பல ஒழுக்ககேடுகள் மலிந்துள்ள உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

துரோணர் ஏகலைவனுக்கு வில்வித்தை சொல்லிக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். அதற்கு அவர் சொன்ன காரணம் அரச குலத்தவர்க்கு மட்டுமே நான் குருவாக இருப்பேன் என்றார். ஆனாலும், வேடனாகிய ஏகலைவன் தளரவில்லை. அவரைப்போல் திருவுருவம் ஒன்றை அடைத்து மானசீக குருவாக அவரை ஏற்று வில் வித்தை பழகினான். அதனால் அருச்சுனனைவிட சிறந்த வில்லாளியாக மாறினான் என்று மகாபாரதம் கூறுகிறது. ஆகவே, குருவின் வார்த்தைகளை கேட்டு நடப்பது எல்லா நன்மைகளையும் தரும் என்பதை சிறுபஞ்சமூலம் இப் பாடலின் மூலமாக உணர்த்துகிறது.

அ.பொ.

உய்தல்-ஒழிதல். திங்கள்-முப்பது நாட்கள். நுணங்கு-நுட்பமான. நூல்-அறிவு நூல். ஓதுதல்-படித்தல். வலம் கொண்டு-வலமாகச் சுற்றிக் கொண்டு.

குறையில்லா மனிதன் ஒருவனுமில்லை

30. ஒருவன் அறிவானும் எல்லாம் யாதுஒன்றும்
ஒருவன் அறியா தவனும்-ஒருவன்
குணன்அடங்கக் குற்றம் இல்லானம் ஒருவன்
கணன்அடங்கக் கற்றானும் இல்.

விளக்கவுரை

எல்லாவற்றையும் அறிந்தவன் எவனுமில்லை. எதுவுமே அறியாதவன் என்று எவனும் இருக்க முடியாது. நல்ல உயர் பண்புகளே இல்லாதவன் இருக்க முடியாது. குற்றமே செய்யாத ஒருவனும், முற்றும் கற்றுணர்ந்த ஒருவனும்

இருக்க முடியாது. மொத்தத்தில் எல்லா மனிதர்களும் குணங்களும், குறைகளும் உடையவர்கள்தான் குற்றமே செய்யாதவன் பிறக்க வேண்டிய அவசியம் இல்லை. பிறவி எடுத்திருப்பவர்கள் எல்லோருமே நல்வினை, தீவினை ஆகிய கலப்பான செயல்களை செய்தவர்கள்தான். அதனால் தான் குணங்களும், குற்றங்களும் கயந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இப்போது கிடைத்திருக்கும் இப்பிறவியால் வைராக்கிய சித்தத்தோடு தூய ஒழுக்க நெறி யில் நின்றால் தெய்வ காட்சி கிட்டும் பிறவிப் பிணி அழியும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கணம்-நூல், தொகுதி. அடங்க-முற்றுமாக.

தவத்தின் இலக்கணம்

31. உயிர்நோய் செய்யாமை உறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கண் செய்யாமை-செயிர்நோய்
விழைவு வெகுளி இவைவிடுவான் ஆயின்
இழிவன்று இனிது தவம்.

விளக்கவுரை

மற்ற உயிர்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல். தனக்கு வந்த துன்பத்தை வெளிக்காட்டாமல் மறைத்துக் கொள்ளுதல். பிறருக்கு கோபம் உண்டாக்கும் துன்பத்தை செய்யாதிருத்தல், கோபத்தைத் தூண்டும் துன்பத்தால் உண்டாகும். ஆசை, ஆத்திரம் ஆகியவற்றை ஒருவன் விட்டுவிட்டாள் தவம் இனியன வற்றையெல்லாம் கொடுக்கும். தீயகுணங்களை உடையவன் தவம் செய்தால் போதிய பயனைப் பெறமாட்டார்கள் என்பது உட்கருத்தாகும்.

அ.பொ.

உறுநோய்-தனக்கு வந்த துன்பம். செயிர்-சினம். நோய்-துன்பம். விழைவு-ஆசை. வெகுளி-அச்சம். இழிவன்று-தாழ்ந்ததாகாது.

பெருமைக்குரியவர் யார்... யார்?

32. வேட்பவன் பார்ப்பான் விளங்கிழைக்குக் கற்புடைமை
கேட்பவன் கேடில் பெரும்புலவன்-பாட்டவன்
சிந்தையான் ஆகும் சிறந்தது உலகினுள்
தந்தையால் ஆகும் குலம்.

விளக்கவுரை

தீ வளர்த்து வேள்வி செய்பவன் பார்ப்பனை இது அவனுக்கு பெருமை தரும். பார்ப்பனன் என்பவன் என்றால் சுத்தமானவன் என்பதை வாசகர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் அழகு விளங்கும் ஒளி மணி அணிகள் புனைத்திருக்கும் பெண்ணுக்கு பெருமை தருவது கற்பு. கற்பில்லாதவன் ரத்தினத்தை இழைத்து அணிந்தாலும் அவனுக்கு பெருமை இல்லை. ஆசாரிடம் பல நூல்களை ஆர்வமுடன் கேட்டு அறிபவன் பெரிய புலவனாக ஆவான். அப்புலமை உலகமெங்கும் உயர்ந்து விளங்கும் ஒருவனுடைய குலப்புண் தந்தையால் அமையும். தலைவன் வல்லமை பெற்றிருந்தால்தான் குலம் சிறப்புடன் விளங்கும். குலம் சிறப்பாக வாழ்ந்தால்தான். புகழுடன் விளங்கும் என்பது பொருளாகும்.

அ.பொ.

வேட்பவன்-வேள்வி செய்பவன். இழை-ஆபரணம். கேடுஇல்-அழிவில்லாத.

வள்ளல் யார்?

33. வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிகன்
உய்ப்பானே ஆசான் உயர்கதிக்கு-உய்ப்பான்
உடம்பின் ஆர்வேலி ஒருப்படுத்து ஊன்ஆரத்
தொடங்கானேல் சேறல் துணிவு.

விளக்கவுரை

செல்வத்தை ஈட்டி சேமித்து வைப்பவன் வள்ளல் ஆவான். பொருளை பிறருக்கு வழங்குபவன் வணிகன் ஆவான்.

மேல்நிலைக்கு ஒருவனை உயர்த்துபவன் ஆசிரியன் ஆவான். உயிரைக் கொல்லாமல், மாமிசம் உண்ணாமல் இருப்பவன் உயர்கதியை அடைவான் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. செல்வத்தை பொறுப்பாக சேமித்து வந்தால்தான் நிலையாக கொடையை வழங்க முடியும். பிற உயிர்களை துன்புறுத்தாதவர்கள் நல்ல கதியை அடைவான் என்று சொன்னது அவன் மெய்ஞானத்தை அடைந்து வீடு, பேற்றை அடையலாம் என்பது பொருள்.

அ.பொ.

உய்த்தல்-உயர் நிலையில் செலுத்துதல். ஆர்-பொருந்திய. ஒருப்படுத்து-நீக்கி. ஊன்-சதை. ஆர்-உண்ண. துணிவு-உறுதி.

பணிவுதான் பயன் தரும்...

34. வைததனால் ஆகும்வசை வணக்கம் நன்றாகச்
செய்ததனால் ஆகும் செழுங்குலமும்-செய்த
பொருளினால் ஆகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம்.

விளக்கவுரை

ஒருவரை இழித்தும் பேசுவதால் ஒரு நன்மையும் உண்டாகாது. பழிதான் வரும். மற்றவரைப் பணிந்து வணங்குவதால் ஒரு இழப்பும் உண்டாகி விடாது. நன்மையே வந்து சேரும். குலம் பெருமை மேலோங்கும். உழைத்து சேர்த்த பொருளால் இன்பம் உண்டாகும். அன்புள்ளத்தோடு நெஞ்சு நெகிழ்தல் நற்செயல்கள் செய்வதற்கு இடமாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

உழைத்து சம்பாதித்த செல்வம் இன்பம் உண்டாக்கும் என்று சொல்லப்பட்டது. தீயவழிகளில் ஈட்டிய பெரும் செல்வம் பல துன்பங்களை தரும். இதை அனுபவரீதியாக பலர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடினமான உழைத்து ஈட்டிய செல்வம் குறைவாக இருந்தாலும். அந்தப் பணம் பிரமாஸ்திரத்தைப் போல் துன்பங்களை அழித்து

விடும். உடலுக்கும், மனதுக்கும் மிகப் பெரிய சக்தியை தரும். நீங்கள் அனுபவரீதியாக இதை அறியலாம். அறிந்து பாருங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும்விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

வசை-பழி. வணக்கம்-பண்பு. போகம்-இன்பம். அருள்-இரக்க மனம். அறம்-நற்செயல்.

பேரின்ப வீடு தரும் ஞானம்

35. இல்இயலார் நல்லறம் ஏனைத் துறவறமும்
நல்இயலின் நாடி உரைக்குங்கால்-நல்இயல்
தானத்தால் போகம் தவத்தால் சுவர்க்கம்
ஞானத்தால் வீடாக நாட்டு.

விளக்கவுரை

இல்லற வாழ்வில் இருந்து ஒழுகுவோர் செய்யும் நற்செயல்கள், பற்றும் பற்று எல்லாம் விட்டொழித்து கறவை மேற்கொண்டு ஒழுகுபவர்கள் செய்கிறவர்களின் நற்செயல்கள் எனினும் இரண்டின் தன்மையை ஆராய்ந்து இப்படி சொல்லலாம். நல்வினையாகிய கொடை குணத்தால் இன்பம் உண்டாகும்.

துறவு மேற்கொண்டு செய்த தவத்தால் சுவர்க்கம் வாய்க்கும். நல்ல நூற்களை கற்றறிந்த பெற்ற ஞானம், நல்லொழுக்கத்தால் வீடு, பேறு கிட்டும். ஞானத்தால்தான் நிலையான வீடு பேறு கிட்டும் என்று சொல்லப்பட்டது. ஞானம் என்றால் என்ன? தன்னை உடல் என்று நினைப்பது அஞ்ஞானம். தன்னை அறியாத ஆத்மா என்று நினைப்பதே ஞானம். இந்த ஞானம் பெறவே நமக்கு மனித பிறப்பு கிடைத்திருக்கிறது. ஆகவே, தன்னை உள்ளபடியே அறிய தவம் வேண்டும். ஞானம் பெறவேண்டும். இதுவே விவேகம். ஆகவே, ஆசை என்னும் சுழலில் அகப்பட்டுக் கொள்ளாமல் நாம் பரம் பொருளின் கூறு என்பதை அறிய இப்பிறவியை அர்ப்பணிக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடலே அமைந்துள்ளது.

அ.பொ.

இல்இயல்-இல்லற ஒழுக்கம். துறவறப்-துறவு ஒழுக்கம். உரைக்குங்கால்-சொல்லுமிடத்து. நல்இயல்-நற்செயல். தானம்-பிறருக்கு கொடுத்து உதவுவதை. போகம்-இன்பம். சுவர்க்கம்-வானுலகம். ஞானம்-ஆற்ற விந்தடங்கிய நல்அறிவு. (தன்னை ஆத்மா என்று அறிவது). வீடு-பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுதல்.

எது அழகு?

36. மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்-செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

விளக்கவுரை

நீண்ட கருங்கூந்தல். தலை முடியின் அழகும், கண்ணை கவரும் மென் மார்புகளின் அழகும், செம்பர் சூட்டிய நகங்கள் உள்ள விரல்களின் அழகும், வளைந்த காதுகளின் அழகும், குறை சொல்ல இயலாதபடி வரிசையுற அமைந்த முத்துப் போன்ற வெண்ணிறப் பற்களின் அழகும் ஒருவர்க்கு அழகல்ல. ஒருவருக்கு உண்மையான அழகு என்பது பல நூல் கற்ற கல்வியால் பெறும் சொல் ஆற்றலால் வரும் அழகே ஆகும்.

பல நூல் கற்ற கல்வி என்பது தான் கூறும் சொற்களை எவரும் மறுத்து பேச முடியாத நாவன்மையுள்ள சொற்கள் ஆகும். உண்மையான கல்வி என்பது ஆன்மீகத்தை போதிக்கும் கல்வியே ஆகும். ஆன்மீக கல்வி என்பது நம்முடைய உண்மையான தெய்வத் தன்மையை வெளிப்படுத்தும் கல்வியே ஆகும். இந்த கல்வியை கற்றவர்களே உண்மையில் அழகுடையவர்கள். அழகு என்பது அளவோடு அமைந்த அணுக்களால் உடல் அழகு மிளிர்வதில் இல்லை. ஆன்மீக கல்வி இல்லாத உடல் அழகு உடையவர்கள் யோகிகளின் கண்களுக்கு விலங்கு போலவே தோன்றுவார்கள். ஆகவே, உண்மையான அழகு என்பது பேருண்மையை மனித சமுதாயத்திற்கு அளித்து எல்லோரையும் அச்சமற்றவர்களாக

ஆக்குவதே ஆகும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

வனப்பு-அழகு. உகிர்-நகம்.

இது சான்றோர் குணம்

37. தொழீஇ அடஉண்ணார் தோழர்இல் துஞ்சார்
வழீஇய பிறர்பொருளை வெளவார்-கெழீஇக்
கலந்தபின் கீழ்காணார் காணாய் மடவாய்
புலந்தபின் போற்றார் புலை.

விளக்கவுரை

அடிமைப் பெண் சமைத்த உணவை சான்றோர் உண்ண மாட்டார்கள். ஏனெனில் அது சுத்தமாக இருக்காது. நண்பர்கள் வீட்டில் தனியாக சென்று தூங்கமாட்டார்கள். மறந்தும் பிறர் பொருளை திருடமாட்டார்கள். ஒருவரிடம் நட்பு கொண்ட பிறகு குறை காணமாட்டார்கள். அதாவது நட்பு கொள்வதற்கு முன்பே நன்கு ஆராய்ந்த பின்னரே நட்பு கொள்வர் என்பது பொருள். பெண்ணே தெரிந்து கொள் நண்பர் பகைவர் ஆகிவிட்டாலும் அவரிடம் உள்ள குறைகள் தட்டிக் கேட்காமல் இருக்கமாட்டார். இதுவே சான்றோரின் குணங்கள்.

அ.பொ.

தோழர் இல்-நண்பர் வீடு. துஞ்சுதல்-தூங்குதல். வழீஇய-தவறியும். வெளவுதல்-கவர்தல். கெழீஇ-நண்பராகி. கீழ்-குறைகளை. புலந்த பின்-பிணங்க நேர்ந்த நிலையில். புலை-குற்றம். மடவாய் காணாய்-இளமை பொருந்திட பெண்ணே இதனை அறிவாயாக.

இவை நல்லது... நல்லது...!

38. பொய்யாமை நன்று பொருள்நன்று உயிர்நோவக்
கொல்லாமை நன்று கொழிக்குங்கால்-பல்லார்முன்
பேணாமை பேணும் தகைய சிறிதெனினும்
மாணாமை மாண்டார் மனம்.

விளக்கவுரை

பொய் சொல்லாமை நல்லது. கடுமையாக உழைத்து செல்வத்தை ஈட்டுவது நல்லது. வருந்தி துன்புறும் வண்ணம் ஒரு உயிரை கொல்லாமல் இருப்பது நல்லது. பலர் கூடி யிருக்கும் கூட்டத்தில் ஒரு பொருளுக்கு ஆசைப் படாமல் இருப்பது நல்லது. ஒரு சிறிதும் தன்னைப் பற்றி தற்பெருமை கொள்ளாமல் இருப்பது நல்லது இந்த உயர் குணங்கள் சாத்வீகமாகும். இந்த சாத்வீகம்தான் நம்மை தெய்வத்திற்கு அருகில் அழைத்து செல்கிறது. தெய்வமாக ஆக்குகிறது. மனிதன் தெய்வத்தின் வடிவமே. தான் ஒரு அழியும் உடல் என்று நினைத்து அவன் அச்சத்தின் பிடியில் சிக்கியிருக் கிறான். மேலே கூறப்பட்ட சாத்வீக குணங்களால் மனிதன் தெய்வமாகிறான். இதனை குறிப்பாக உணர்த்து சிறுபஞ்ச மூலம் பாடல் இது.

அ.பொ.

பொய்யாமை-பொய் சொல்லாமல் இருப்பது. நோவ-வருந்த. பேணாமை-விரும்பாமை. பேணும் தகைய-ஆசைப்படுவது. மாணாமை-பெருமைப்பட்டுக் கொள்ளாமை. மாண்டார்-மாட்சிமைக்குரிய சான்றோர்.

திருடனை காவல் வைக்க கூடாது...

**39. பண்டாரம் பல்கணக்கு கண்காணி பாத்துஇல்லார்
உண்டார் அடிசிலே தோழரில்-கொண்டராய்
யாக்கைக்குத் தக்க அறிவுஇல்லார் காப்படுப்பின்
காக்கைக்குக் காப்படுத்த சோறு.**

விளக்கவுரை

சேமித்து வைத்திருக்கும் பொருள்களை பாதுகாக்கவும், கணக்கிடவும் வயதுக்கு ஏற்ற அறிவற்றவர்களை நியமிக்க கூடாது. அதேபோல் ஒரு பெண்ணின் கற்புக்கு சபல புத்தி யுள்ள அறிவற்றவரை காவல் வைக்கக்கூடாது. உடன் பழகும் நண்பர்களில் நல்லவர் என்று எண்ணி வயதுக்கு ஏற்ற அறிவில்லாதவரை பொருள்களுக்கு காவல் வைக்க கூடாது. உண்ணும் சோற்றுக்கு காகத்தை காவல் வைத்ததுபோல்

அது ஆகிவிடும். அதாவது, காகம் காவல் காக்காது. சோற்றை அதுவே தின்றுவிடும். ஆகவே, தகுதியில்லாதவர்களை காவல் வைத்தால் காவலுக்குரிய பொருள்கள் பறிபோய்விடும் என்று இச்சிறுபஞ்சமூலம் பாடல் எச்சரிக்கை செய்கிறது.

அ.பொ.

கா-காவல். படுப்பின்-வைத்தால். காக்கைக்கு-காகத்திற்கு. காப்படுத்த-காவல் செய்ய வைத்த கள்வனையே காவலனாக்க கூடாது என்பது பாடலின் பொருள்.

இவர்களே நல்ல வீரர்கள்

40. உடைஇட்டார் புல்மேய்வார் ஓடுநீர் புக்கார்
படைஇட்டார் பற்றேதும் இன்றி-நடையிட்டார்
இவ்வகை ஐவரையும் என்றும் அணுகாரே
செவ்வகைச் சேவகர் சென்று.

விளக்கவுரை

உடுத்த உடையை இழந்தவர்கள், உண்ணுவதற்கு உணவின்றிப் போனதால் புல்லை மென்று தின்பவர்கள் தப்பி பிழைக்க ஓடும் நீரில் புகுந்து மறைந்து கொண்டவர்கள், காத்துக் கொள்ள இந்த ஆயுதங்களை எல்லாம் இழந்து நிற்பவர்கள். பக்க துணை ஆதரவு ஏதும் இல்லாது தப்பி ஓடவும் இயலாது. நடக்கவும் முடியாமல் தள்ளாடுபவர்கள் ஆகிய ஐந்து வகையினரையும் எக்காலத்திலும் சிறந்தவராகிய போர் வீரர்கள் நெருங்கமாட்டார்கள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. பாண்டவர்க்கும். கௌரவர்க்கும் போர் நடந்தது. குருட்சேத்திர யுத்த பூமியில் கௌரவரின் மிகப் பெரிய சேனை அழிந்தது. மாவீரர்கள் எல்லாம் மடிந்தார்கள். இறுதியாக துரியோதனன் ஒருவன் மிஞ்சினான். அவன் நீர் மடு ஒன்றில் மூழ்கி மறைந்தான். வேடுவர் மூலமாக அதனை அறிந்த பாண்டவர்கள் அந்த மடுவுக்கு வந்தார்கள். துரியோதனை... சுத்த வீரனாகிய நீ இப்படி கோழையைப் போல் ஒளியாதே. வெளியே வா என்று அழைத்தார்கள். பாண்டவர்கள் நினைத்திருந்தால் நீரிலேயே அவனை அழிந்திருக்க முடியும். அப்படி செய்யவில்லை. கோபத்துடன் வெளியே வந்த

துரியோதனனைப் பார்த்து எங்கள் ஐவரில் யாரிடம் வேண்டுமானாலும் யுத்தம் செய். தோற்பவர்கள் ராஜ்ஜியத்தை இழப்பாரகள் என்று தருமபுத்திரன் கூறினான். அப்போது கூட தனக்கு சமவீரனான பீமனிடமே யுத்தம் செய்வதாக துரியோதனன் விரும்பினான். இதுதான் வீரர்களுக்கு அழகு என்று சிறுபஞ்சமூலம் கூறுவதற்கு இந்த சம்பவங்களே சான்றாக உள்ளன.

அ.பொ.

உடை-உடுத்தும் ஆடை. இட்டார்-தவறவிட்டவர். மேய்தல்-தின்றுதல். புக்கார்-புகுந்தவர். படை-ஆயுதம். இட்டார்-இழந்தவர். பற்று-ஆதரவு. நடை இட்டார்-நடைத் தளர்ந்தவர்கள். அணுகார்-நெடுங்கார். செவ்வகை-சிறந்த. சேவகர்-வீரர்.

இது பெரியோர்க்கு அழகு

41. பூவாதாள் பூப்பும் புறம்கொடுத்தாள் இலிங்கி
ஓவாதாள் கோலம் ஒருபொழுதும்-காவாதாள்
யார்யார் பிறர்மனை ஆனாள் உள்ளிட்டிவ் ஐவரையும்
சாரார் பகைபோல் சலித்து.

விளக்கவுரை

பருவம் அடையாத கன்னிப் பெண், மாதவிடாய் நின்று போன முதிர்ச்சி அடைந்த பெண், பெண் துறவி, தன்னை எப்போதும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் (பிற ஆடவரைக் கவர) கற்பை போற்றி பாதுகாத்தவள், எவர்க்கும் மனையாளாகவும் விலை மகளிர் ஆகிய ஐவரையும் பெரியோர் பகைவரைப்போல் வெறுத்து ஒதுக்குவர் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

பூவாதாள்-பருவம் அடையாதவள். பூப்பும் புறம் கொடுத்தாள்-மாதவிடாய் நின்று போனவள். இலிங்கி-பெண் துறவி. ஓவாதாள்-விலக்காதவள். ஒப்பனை-அழகு. காவாதாள்-கற்பொழுக்கம் காக்கதவறியவள். யார்யார்-யாவர்க்கும். பிறர்மனை ஆவாள்-பெண்டானவள். சாரார்-நெருங்கார். சலித்து-வெறுத்து.

நல்ல பெண்களுக்கு இலக்கணம்

42. வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித்-திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர்ச் சிறப்பு.

விளக்கவுரை

கணவனுக்கு இருக்கும் செல்வத்தின் அளவுக்கு தகுந் தாற்போல் செலவு செய்து இல்லறம் நடத்துபவள். விருந் தினரை நன்கு உபசரிப்பவள், உறவினர்கள் அஞ்சும்படி சுடுசொல் பேசாதவள், புகழும் செல்வமும் கிடைக்கச் செய்யும் தெய்வ வழிபாட்டை தவறாது செய்பவள் ஆகிய குணங்கள் உடையவளே நல்ல பெண்ணுக்கு இலக்கணமா வாள். தெய்வவழிபாட்டை செல்வம், புகழுக்காக தவறாமல் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. ஆரம்பத்தில் செல் வம், புகழ் தேவைதான். ஒருகட்டத்தில் இதையெல்லாம் தாண்டி நிலையான பேரானந்த பெருவாழ்வின் பொருட்டு தெய்வ வழிபாடு செய்ய வேண்டும் என்பதை விளக்கவுரை யில் கூற கடமைப் பெற்றிருக்கிறோம்.

அ.பொ.

வரும் பொருள்-வருவாள். வழக்கறிந்து-செலவிடும் வகை அறிந்து. சுற்றம்-உறவினர். வெகுவாமை-அஞ்சாதபடி. வீழ்ந்து-விரும்பி. ஓம்பி-பாதுகாத்து. திருஆக்கும்-செல்வம் கிடைக்கச் செய்யும். தெய்வதை-தெய்வம். எஞ்ஞான்றும்-எப்போதும். தேற்ற-தெளிவாக. வழிபாடு-துதித்தல்.

நல்லநாள்... நல்லநேரம் தேர்வு செய்க...!

43. நாள்கூட்டம் மூர்த்தம் அவற்றோடு நன்றுஆம்
கோள்கூட்டம் யோகம் குணம்உணர்ந்து-தோள்கூட்டல்
உற்றானும் அல்லானம் ஐந்தும் உணர்வானால்
பெற்றான் நாள்கொள்கை பெரிது.

விளக்கவுரை

நல்ல முகூர்த்த வேளை இவற்றோடு நன்மை தருவ தாகிய நட்சத்திர பொருத்தம், யோகம், இவற்றின் தன்மை

அறிந்து திருமணம் மற்றுமுள்ள நல்லனவற்றை செய்த இந்த ஐந்து பொருந்திய நாளை தேர்வு செய்ய வேண்டும். ஞாயிறு தொடங்கி சனி முதலான வாரநாட்கள், செவ்வாய், சனிக் கிழமைகளை திருமணம் போன்ற நல்ல காரியங்கள் செய்ய தேர்ந்தெடுக்க மாட்டார்கள். மூர்த்தம் என்பது மூன்றே முக்கால் நாழிகைப் பொழுது. முக்கால் மணி (நாம் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது).

அ.பொ.

கோள் கூட்டடம்-நட்சத்திரப் பொருத்தம். யோகம்-பொழுது (அமிர்த யோகம், சித்த யோகம் நன்று. மரண யோகம் தீரு என்பர்). குணம் இவற்றின் நன்மை, தீமைகள். தோள் கூட்டம்-இருவர் தோள் பொருத்தம் திருமணம். உற்றான்-அடைபவன். அல்லான்-மற்ற நல்லனவற்றை மேற்கொள்பவன். பெற்றான் நாள் கொள்கை-நல்லநாளை தேர்ந்தெடுத்துக் கொள்வது. பெரிது-மிகவும் நல்லது.

திருமகளே ஆனாலும்...

44. பேண்அடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுடைமை
நாண்ஒடுக்கம் என்றைந்து நன்றாகப்-பூண்ஒடுக்கம்
பொன்வரைக் கோங்குஏர்ப் பூந்திருவே ஆயினும்
தன்வரைத் தாழ்த்தல் அரிது.

விளக்கவுரை

சுற்றத்தாரை வரவேற்றுப் போற்றுதல். அடக்கம் உடையவளாய் இருத்தல், பிறஆடவரை விரும்பாத பெருந்தன்மை, பெண்மைக்கே உரிய பெருமை. வெட்கத்தால் வரும் ஒழுக்கம் என்ற ஐந்து பண்புகளைப் பெண்கள் கொண்டிருப்பதே (நன்றாம்) நன்மை தருவதாகும். இவை இல்லாதவள் பொற் பூண்பூண்டு இருக்கும் கோங்க மலர் போல் அழகுடைய தாமரை மலரில் வாழும் திருமகளே ஆனாலும், கணவரைத் தாழ்த்தாது தன் கணவருக்கு அடங்கி இருத்தல் நல்லதாகும் என்று சிறுபஞ்சமூலம் இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

பேண்-பேணிகாத்தல். அடக்கம்-மனஅடக்கம். பேணா-விரும்பாத. பீடு-பெருமை. நாண்-வெட்கம். ஒடுக்கம்- சொல், செயல் இரண்டாலும் அடங்கியிருத்தல். பூண்ஒடுக்கம்-பொற்பூண் உள்ளடங்கி

இருக்கும். பொன்வரை-பொன்மாலை. கோங்குஎர்-கோங்கம் பூ போன்ற அழகு. பூந்திரு-தாமரைப் பூவிலிருக்கும் திருமகன். தன்வரை-தன்ன வரை தாழ்த்துதல். தாழ்த்துதல்.

குடி உயரும் (குடியானவர் உயர்வடைவர்)

45. வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான்று உயரவே நெல்உயரும்-சீர்சான்ற
தாவாக் குடிஉயரத் தாங்கரும்சீர்க் கோஉயரும்
ஓவாது உரைக்கும் உலகு.

விளக்கவுரை

நீண்டு அடர்ந்த கருங்கூந்தல் உடைய பெண்ணே. வயலில் வரப்பு நாளும் உயருமானால் வந்து பாயும் நீரின் அளவு உயரும். நீர் மட்டம் வயலில் உயர்ந்திருந்தால் அதில் விளையும் நெற்பயிரும் உயர்ந்தோங்கி வளரும். இதைப் போலவே சிறப்புடைய குறையில்லாக் குடிமக்கள் உயர்ந்தால் மற்றவர்களால் தாங்குவதற்கு அரிய மன்னன் உயர்வான் என்பதே உலகம் ஓயாது உச்சரித்துக் கொண்டிருக்கும் ஓர் உண்மையாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

குடிமக்களை நீதிநெறி பிறழாமல் மன்னன் பாதுகாத்தால் மழை பொழியும். நீர் உயரும். நெல் உயரும். கோள் உயரும். குடி உயரும் மற்ற எல்லாமே உயரும் என்பது கருத்து.

அ.பொ.

வார்-நீண்ட. வரப்பு-வயங்கரை. வைகலும்-நாள்தோறும் நாள் தோறும் வரப்பு உயரவேண்டும் என்றது. நடப்பதால் அழுந்தியும் அகன்றும் வரப்பு தாழும். அதனால் நீர் நிற்கும் அறை குறையும் என்பதால். நீர் சான்ற-தண்ணீர் மிகுதியாகப் பாய்ந்து. சீர் சான்ற-சிறப்புப் பொருந்திய. தாவா-கேடில்லாத குடி, குடிமக்கள், குடியானவர். சீர்-சிறப்பு. கோ-அரசன். ஓவாது-ஓய்வில்லாமல். உரைக்கும்-கூறும்.

இவையெல்லாம் நல்லன...

46. அழியாமை எத்தவமும் சார்ந்தாரை ஆக்கல்
பழியாமை பாத்தல் யார்மாட்டு-ஒளியாமை
கன்றுசாவப் பால்கறவாமை செய்யாமை
மன்று சார்வாக மனை.

விளக்கவுரை

எந்தவிதமான தவமாக இருந்தாலும், அதை செய்பவர்களாயினும், அவர்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல், தம்மை தஞ்சம் என்று வந்தடைந்தவரை உயர்வடையச் செய்தல், பிறர் நம்மைப் பழிகூற இடம் கொடாதிருத்தல், எவரிடமிருந்தும் எதையும் மறைக்காமலும், பகுத்துண்டு வாழ்தலும், கன்றுகுட்டி இறந்த பசுவிடம் பால்கறவாமை.. நீதிமன்றங்கள் பக்கம் வீடு கட்டாமை ஆகிய இவையெல்லாம் நல்லலன என்பார் சான்றோர் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

அழியாமை-கெடுக்காமை. ஆக்கம்-உயர்வடையச் செய்தல். பாத்தல்-பகுத்து உண்ணல். யார் மாட்டும்-எவரிடத்தும். ஒளியாமை-மறைக்காமை. கன்று-கன்றுக்குட்டி. மன்று சார்வை-நீதிமன்றம் பக்கத்தில். மனை செய்யாமை-வீடு எழுப்பாதிருத்தல்.

இது பெரியோர் செயல்

47. நசைகொல்லார் நச்சியார்க்கு என்றும் கிளைஞர்
மிசைகொல்லார் வேளாண்மை கொல்லார்-இசைகொல்லார்
பொன்பெறும் பூஞ்சுணங்கின் மென்முலையாய் நன்குணர்ந்தார்
என்பெரினும் கொல்லார் இயைந்து.

விளக்கவுரை

தம்மை விரும்பியவர் விருப்பத்தை நிறைவேற்ற எப்போதும் தயங்கமாட்டார். தங்கள் உறவினர் உண்ணும் உணவிற்கு தீங்கு செய்யமாட்டார். அடுத்தவர்க்கு செய்யும் உதவியைத் தடுக்க மாட்டார். வரும் புகழை கெடுக்க மாட்டார். பொன் போன்ற நிறமுடைய தேமல் படர்ந்த மென்மையான மார்பை உடையவளே... நன்மைத் தீமைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பெரியோர் எத்தகைய அரிய பொருளை கொடுத்தாலும் தாமாக விரும்பி ஒரு உயிரை கொல்ல மாட்டார்கள் என்று இப்பாடல் கூறுகிறது. பொதுவாக மற்றவர்க்கு எந்த தீங்கும் பெரியோர் செய்ய மாட்டார்கள்.

ஏனெனில் அவர்கள் விவேகம் உள்ளவர்கள் விவேகம் என்பது எல்லா உயிர்களுமே இறைவன் என்பதை அறிந்திருட்டதே. பிற உயிர்க்கு தீமை செய்தால் அது திரும்பி வந்து நன்மையே தாக்கும் என்பதே உயர்நத் விவேகம். பெரியோர்கள் இதனை அறிவார்கள். சிறியோர்கள் அறிய மாட்டார்கள் என்பது கருத்து.

அ.பொ.

நகை-விருப்பம். நச்சியார்க்கு-தம்மை விரும்பியவர்க்கு. இறைஞர்-உறவினர். மிசை-உணவு. இசை-புகழ். பூஞ்சுணங்கு-அழகிய தேமல். என் பெரினும்-எதற்காகவும், எது கிடைப்பாக இருந்தாலும். இயைந்து-மனம் விரும்பி. கொல்லார்-கொலை செய்யமாட்டார்.

பாதுகாவல் உடையவனே அரசன்

48. நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு-மாண்டவர்
ஆய்ந்தன ஐந்து அரணா உடையானை
வேந்தனா நாட்டல் விதி.

விளக்கவுரை

நகரைச் சுற்றிலும் பெரிய ஆழமான அகழி நீர் பெருங் காடு. சதுப்பு நிலம். வானத்தைத் தொட உயர்ந்தோங்கிய மலை ஆகிய காவல் அரண்களுடன் வாழும் குடிமக்கள் என்று அறிவில் சிறந்த பெரியோர்கள் ஆய்ந்தறிந்து சொல்லிய ஐந்து காவல்களையும் தனக்குரிய பாதுகாப்பாகக் கொண்டவனையே அரசன் என்று சொல்லுதல் முறையாகும் என்று இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

நீண்டநீர்-அகழி. காடு-காட்டரண். களர்-சேறு. விண்-ஆகாயம். தோயும்-தொடும். மாண்ட-பெருமை உடைய. மாண்டவர்-மாட்சி உடைய பெரியோர். அரண்-காவல். வேந்தன்-அரசன் நாட்டல்-எடுத்துக்காட்டலே. விதி-முறை.

இவை தீமை பயப்பன...

49. பொச்சாப்புக் கேடுபொருட் செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு முரண்கேடு-தெற்றத்
தொழில்மகன் தன்னோடு மாறாயின் என்றும்
உழுமகற்குக் கேடின் உரை.

விளக்கவுரை

மறதி, தாம் செல்வார்கள் என்ற ஆணவம். அறிவு முதிர்ச்சி பெறாத பேதைக்குணம் கொண்டிருப்பது. மற்றவரோடு மாறுபாடு கொள்வதால் வரும் பகைமை. தன் பணியாளர்களுடன் நட்புடன் பழகாமல் பகை கொள்ளுதல் ஆகிய இவை யெல்லாம் உழுதுடு வாழும் உழவர் பெருமக்களுக்கு பெரும் தீமையை விளைக்கும் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

மாறாதல்-வேறுபடுதல். தொழில் மகன்-வேலை ஆள் அல்லது அடிமை. உழுமகன்-உழவர். கேடு-தீமை. உரை-சொல்.

தலைவனுக்குரிய தகுதிகள்

50. கொல்லாமை நன்று கொலைதீது எழுத்தினைக்
கல்லாமைதீது கதம்தீது தெரிந்து-நல்லார்
மொழியாமை முன்னே முழுதும் கிளைஞர்
பழியாமை பல்லார் பதி.

விளக்கவுரை

ஒரு உயிரை கொல்லாதிருப்பது மிகவும் நல்ல குணமாகும். கொல்வது மிகவும் தீமை. கல்வி கற்காமை தீமை. மற்றவரை கோபித்துக் கொள்வது தீங்கை விளைவுக்கும். உயர்ந்த குணமுடைய பெரியோர் கூறி திருத்துவதற்கு முன்பே, தன் சுற்றத்தார் பழிக்கும்படி நடக்காமல் தன் தவறை திருத்திக் கொள்பவன் தலைவனுக்குரிய தகுதியைப் பெறுவான் என்றுஇப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

கதம்-கோபம். கிளைஞர்-சுற்றத்தார். பழியாமை-பழிக்க இடம் தராமல். பல்லார்பதி-பலருக்கும் தலைவன்.

அதிக உணவு ஆபத்து

51. உண்ணாமைநன்று அவாநீக்கி விருந்து கண்மாறு
எண்ணாமைநன்று இகழல்தீது எளியார்-எண்ணின்
அரியர்ஆவார் பிறர்இல் செல்லாரே உண்ணார்
பெரியர்ஆவார் பிறர் கைத்து.

விளக்கவுரை

தவமிருக்க முயல்வோர் ஆயினும், இல்லறத்தில் இருப்போர் ஆயினும் நாவின் சுவைக்கு அடிமையாகி அதிக அளவு உண்ணாமல் இருப்பது நல்லது வந்த விருந்தினர்கள் மனம் வருந்த, வந்துவிட்டார்களே என்று வெறுப்புடன் பார்ப்பது தீயது தன்னிலும் வறுமை நிலையில் இருப்பவரை இகழ்ந்து பேசாமல் இருப்பது நல்லது. பிறர்மனை விரும்பாதவரே பெருமை உடையவர். பிறரிடம் சென்று பொருள் பெறா திருப்பது நல்லது. இவை யெல்லாம் உயர்ந்தோர் பண்பு என்பதை சிறுபஞ்சமூலம் எடுத்துக்காட்டுகிறது.

அ.பொ.

அவா-ஆசை. நீக்கி-விட்டுவிட்டு. உண்ணாமை-உண்ணாதிருத்தல். கண்மாறு-புறக்கணித்தல் அன்பு நோக்கு இன்மை. கைத்து-பிறர் பொருள். அருமை-அருமை உடையவர்.

கணவரை கவரும் வழி

52. மக்கள் பெறுதல் மடன்உடைமை மாதுடைமை
ஒக்க உடன்உறைதல் ஊண்அமைவு-தொக்க
அலவலை அல்லாமை பெண்மகளிர்க்கு ஐந்து
தலைமகனைத் தாழ்க்கும் மருந்து.

விளக்கவுரை

நல்ல பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளுதல், அடக்கம் உடைமை. கணவன் விரும்பும் அழகுடன் விளங்குவது. கொண்ட கணவனுடன் கூடிவாழ்தல். அவன் விரும்பு அறு சுவை உணவளித்து உதவுதல். ஆகியவற்றுடன் கூடிய ஐந்து நற்பண்புகளும் அற்பமானவை அல்ல. இவையே பெண்கள் தங்கள் கணவரை அடங்கியவராகச் செய்யும் அரிய மருந்து போன்றவை என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

மடம்-அடக்கம். மாது-அழகு. ஒக்க-ஒன்றி. உடனுறைதல்-கூடி வாழ்தல். ஒக்க-கூடிய. அலவலை-அற்பச் செயல். தலைமகன்-கணவன். தாழ்க்கும்-தம்மிடம் அடங்கும்.

பெண்ணுக்கு காவலர்கள்...

53. கொண்டான் கொழுநனுடன் பிறந்தான் தன்மாமன்
வண்டார் பூந்தொங்கல் மகன்தந்தை-வண்தாராய்!
யாப்பார் பூங்கோதை அணிஇழையை நன்கியையக்
காப்பார் கருதும் இடத்து.

விளக்கவுரை

தன்னை மணந்து கொண்ட கணவன், கணவனுடன் கூடப் பிறந்தவன், தன் தாயுடன் பிறந்த தாய்மாமன், வண்டுகள் மொய்க்கும் மாலைகள் தோளில் தொங்கும் மகள், தந்தை ஆகியோர் ஒரு பெண்ணுக்கு உண்மையான காவலர்கள் ஆகும். அழகிய செழுமையான தேன் நிறைந்தமலர்களால் ஆள மாலை அணிந்த பெண்ணே. இதை நீ அறிவாயாக. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

கொண்டான்-கணவன். கொழுநனுடன் பிறந்தான்-கணவனுடன் கூறப் பிறந்தவன். வண்டுஆர்-வண்டுகள் தேன் உண்ண மொய்க்கும். தொங்கல்-மாலை. வண்-வன்மை. தாராய்-மாலை அணிந்தவளே. யாப்பு-கட்டுதல். ஆர்-பொருந்திய. இயைய-ஏற்றதான. காப்பார்-காப்பாளராவர். கருதுமிடத்து-எண்ணிப்பார்க்கு போது.

பெண்களிடமிருந்து தப்பவழி

54. ஆம்பல்வாய் கண்மனம் வார்புருவம் என்றைந்து
தாம்பல்வாய் ஓடி நிறைகாத்தல்-ஓம்பார்
நெடுங்கழை நீள்மூங்கில் எனஇகழ்ந்தார் ஆட்டும்
கொடுங்குழை போலக் கொளின்.

விளக்கவுரை

பெண்களின் பற்கள், வாய், கண்கள், மனம், புருவங்கள் என்ற ஐந்து உறுப்புகளில் மயங்கி தம்முடைய மனப் பல வழிகளிலும் ஓடி அலைவதை காத்துக் கொள்ள முடியாத ஆண்களுக்கு ஒரு யோசனை கூறப்படுகிறது. இந்த ஐந்து உறுப்புகளையும் மூங்கில் கழி என்ற நினைத்துக் கொண்டார் ஆசையிலிருந்து விடுபடலாம் என்பதே அரிது.

அ.பொ.

தாம்பல்வாய் ஓடி-தன் மனம் பலவாறு சிதற. நிறை காத்தல்-மனஒழுக்கம் உறுதிப்பாட்டைப் பேணுதல். ஓம்பார்-காத்துக் கொள்ளாதவர். நெடுங்கழை-நீண்டு திரண்ட நெடிய மூங்கில். ஆட்டும்-அசையும். கொடுங்குழை-வளைந்த காதணி.

யார் சிறப்பு பெறுவர்?
யார் இகழ்ச்சி அடைவர்?

55. பொன்பெறும் கற்றான் பொருள்பெறு நற்கவி
என்பெறும் வாதி இசைபெறும்-முன்பெறக்
கல்லார் கற்றார் இனத்தர்அல்லார் பெறுபவே
நல்லார் இனத்து நகை.

விளக்கவுரை

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் அறிஞன் பொன் பெறுவான். நல்ல இசைப் பாடகன் கவிஞன் பரிசுப் பொருள்களை அடைவான். திறமையுடன் வாதம் செய்பவன் புகழ் பெறுவான். இளமை பருவத்தில் கற்றுத் தேறாதவன். கற்றறிந்த பெரியோரிடம் சேராதவன் சிரிப்புக்கு இடமாகி அவமானம் அடைவான் என்று இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

இசை-புகழ். முன்பெற-இளமைப் பருவத்தில். கற்றார் இளம்-படித்தவர் கூட்டம். நகை-கேலி.

எது அறிவுடைமை?

56. நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்து
ஒல்லை உயிர்க்கு ஊற்றம்கோலாகி-ஒல்லும்எனின்
மாயம் பிறர்பொருள் கண்மாற்றுக மானத்தன்
ஆயின் அழிதல் அறிவு.

விளக்கவுரை

நல்ல செயல்களை செய்தல், மற்றவர்கள் செய்த தீமைகளை மறத்தல், துன்பப்படும் உயிர்களுக்கு உதவி செய்தல், மற்றவர் பொருளை விரும்பாத மனம் உடையவராக வாழ்தல் ஒருவனுக்கு நன்மை தரும். இந்த நல்ல குணங்களுக்கு அழிவு நேருமானால் அவன் வாழ்வதைவிட சாவதே மேலாகும் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

நல்ல-நற்செயல்கள். ஒல்லை-விளாந்து ஊற்றம். கொல்-ஊன்றுகோல். ஒல்லும் எனின்-இயலுமானால். மாயம்-வஞ்சனை. மானத்தன்-மானம் பெரிதென. எண்ணும் மனம் உடையவன். அழிதல்-உயிர் விடும். அறிவு-அறிவுடைமை.

அமைச்சனுக்கு இலக்கணம்

57. தன்நிலையும் தாழாத் தொழில்நிலையும் துப்புஎதிர்ந்தார்
இன்நிலையும் ஈடுஇல் இயல்நிலையும்-துன்னி
அளந்தறிந்து செய்வான் அரசன் அமைச்சன்யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான்.

விளக்கவுரை

தன் நிலை, தான் மேற்கொண்டிருக்கும் தொழிலின் நிலை, தன்வலிமை, பகைவனுக்கு சாதகமாக உள்ள நிலைமை, அழிவில்லா யதார்த்தம், அதாவது உண்மை நிலையை ஆராய்ந்து, நன்மை, தீமைகளை அளந்து பார்த்து செயல்படுபவன் அரசன். அதேபோல் அமைச்சனும் அனைத்தையும் பகத்தளந்து செயல்படக்கூடியவன் ஆகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

தாழா-தாழ்வடையாத. தொழில்-வினை. துப்பு-வலிமை. ஈடுஇல் -அழிவில்லாத இயல்நிலை-உலகியல் நடைமுறை. துன்னி-நுணுகி. பிளந்தறியும்-பகுத்துண்டு, பார்த்தறியும். பேராற்றல்-பெரும் வலிமை.

நல்லவன் என ஏற்க தக்கவன்...

58. பொருள்போகம் அஞ்சாமை பொன்றுங்கால் போந்த
அருள்போகா ஆர்அறம் என்றைந்தும்-இருள்தீரக்
கூறப்படும் குணத்தான் கூர்வேல் வல்வேந்தனால்
தேறப்படும் குணத்தி னான்.

விளக்கவுரை

செல்வம், போகம், துன்பத்தைக் கண்டு அஞ்சாமை, உயிருக்கு அழிவு வரும்போது அன்புடன் உதவி செய்தல் என்கிற உயர்வான நற்செயல்கள் ஐந்தும் நல்லவன் என்பதற்கு அடையாளமாகும். வேலேந்திய மன்னனுக்கு ஒரு செயலை தேர்ந்து நிறைவேற்ற ஒப்படைக்கத் தக்கவன். அவனே என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

போகம்-இன்பம். அஞ்சாமை-பயம் கொள்ளாமை. பொன்றும் கால்-அழிவடையும் நிலையில். போந்த-காட்டும். அருள்-அன்பு. ஆர்அறம்-அரிய நற்செயல்கள் இருள்தீர-குறை இல்லாது. தேறப்படும்-தெளியப்படும்.

உழவனின் இலக்கணம்

59. நன்புலத்து வைஅடக்கி நாளும்மாடோ போற்றிப்
புன்புலத்தைச் செய்து எருப்போற்றியபின்-இன்புலத்தின்
பண்கலப்பை என்றிவை பாற்படுப்பான் உழவோன்
நுண்கலப்பை நூல் ஓதுவார்.

விளக்கவுரை

நன்கு விளைகின்ற நஞ்சை நிலத்தை சீராக்கி உழவு மாடுகளை காப்பாற்றி, புன்செய் நிலத்தையும் நன்செய் போல் மாற்றி விவசாயம் செய்யவேண்டும். கலப்பையால் பதமாக உழுது, எருவிட்டு நுட்பமாக நல்ல விளைச்சல் வரும்படி செய்பவனே நம் உழவன் ஆகும். உழைப்பினால் தான் உழவன் உயர முடியும். வெறும் நிலத்தை மட்டும் வைத்திருந்தால் போதாது. ஒவ்வொரு கட்டத்திலும் கவனமாக இருந்து நீர் பாய்ச்சி, களையெடுத்து, ஆடு, மாடுகள் மேயாதிருக்க வேலி கட்டி கடுமையாக உழைப்பவனே நல்ல உழவன் என்று இப்பாடல் அடையாளம் காட்டுகிறது.

உழைப்பிலேதான் உயர்வு இருக்கிறது உழைப்புதான் உயர் செல்வம். உழைப்புதான் நம் பெருமையை உயர்த்தக்

கூடியது. ஆகவே, உழவன் எப்போதும் விழிப்புடன் இருந்து பயிர்களை பாதுகாக்க வேண்டும். அவனே உழவனுக்கு இலக்கணம் போன்றவன் என்று இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

புலம்-நிலம். கலப்பை-நிலத்தை உழும் கருவி. நுண்கலப்பை நூல்-நுட்பமான உழவுத் தொழில் என்றும் கலை. ஓதுவார்-அறிந்து எடுத்துச் சொல்பவர்கள் நன்செய் நிலத்து வைக்கோலை சேமித்து, உழவு மாடுகளைக் காத்து, புன்செய் நிலத்தை நன்செய் நிலமாக மாற்றி, எருவிட்டு பண்படுத்தி கலப்பையால் உழுபவனே உழவுத் தொழிலில் தலைசிறந்தவன் என்பதாம்.

யாசிக்காமல் வாழ்வது நல்லது

60. **ஏலாமை நன்றுஈதல்தீது பண்பில்லார்க்குச்**
சாலாமை நன்று நூல்சாயினும்-சாலாமை
நன்று தவநனி செய்தல் தீதுஎன்பாரை
இன்றுகாறும் யாம் கண்டிலம்.

விளக்கவுரை

ஒருவரிடம் சென்று இரந்து கேட்டு ஒன்றைப் பெறாமல் இருப்பது நல்லது. நற்குணம் மற்றும் உயர் பண்பு இல்லாதவர்களுக்கு ஒன்றை கொடுத்து உதவுதல் தீமையை உண்டாக்கும். நற்குணம் இல்லாதவருக்கு நூல் அறிவால் பயன் இருக்காது. ஒருவன் கெடுவதாக இருந்தாலும் உயர் பணியை கைவிடாதிருத்தல் நல்லது. நல்ல தவத்தை செய்வது தீது என்று சொல்பவரை இதுவரை யாம் கண்டதில்லை என்ற பொருளில் இப்பாடல் உள்ளது.

தவம் தான் எல்லா வெற்றிகளையும் தருகிறது. இந்த உலகத்தில் நிறையபேர் தோல்வியுடைகிறார்கள். குறைவானவர்களே வெற்றி பெறுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? தவம் செய்கிறவர்கள் உலகில் குறைவு. தவம் செய்யாதவர்களே அதிகம். ஆகவே, தவம் செய்வது தீமை என்று இதுவரை எவரும் கூறியதில்லை என்பது கருத்து.

அ.பொ.

நூல் சாலாமை-நூல் அறிவு நிறைய அறிவிக்காதிருத்தல். சாயினும்-கெடுவதாயினும். சாலமை-நற்குணங்களால் உயர்வாடயாதிருத்தல். தனி-மிகுதியாக.

இவை உயிரை வருத்தும் நோய்கள்

61. அரம்போல் கிளை அடங்காப்பெண் வியக்கத்தொண்டு
மரம்போல் மகன்மாறாய் நின்று-சுரம்போலக்
கள்ளநோய் காணும் அயல்ஐந்தும் ஆகும்ஏல்
உள்ளநோய் வேண்டா உயிர்க்கு.

விளக்கவுரை

தேய்க்க உதவும் அரம் போல வருத்தம் உண்டாக்கும் சுற்றம், அடங்கி நடக்காத மனைவி கீழ்ப் படிந்து நடக்காத பணியாள், மரம் போலிருக்கும். அழிவில்லாத மகன், மாறு கொண்டு விஷம் போல் வஞ்சகம் புரியும் அடுத்து இருப்ப வர்கள் என்ற ஐந்தும் இருந்து விட்டால் ஒருவனுக்கு வேறு துன்பம் தேவையில்லை. முவே உயிரை வருத்தும் நோய்கள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அடங்காத மனைவி, அறிவில்லாத மகன், துன்பம் தரும் சுற்றத்தார் ஏன் ஒருவனுக்கு அமைகிறார்கள்? அவரவர் செய்த வினைகளே இதற்குக் காரணமாக உள்ளன. இத்தகையவர் ஒருவனுக்கு நோய்கள் என்று கூறுவதால் மனிதனுக்கு என்ன பயன்? தன்னுடைய தீவினையாலே இப்படிப்பட்ட ஆட்களை அவன் பெற்றுள்ளான். ஆகவே, இப்போதும் வாழும் மனிதர்கள் எந்தநிலையில் தற்போது இருந்தும் தீய செயல்களை செய்யக்கூடாது நல்வினைகளையே செய்ய வேண்டும். இப்படி நல்வினையை மலைபோல் குவித்தால் முன்பு இருக்கும் தீவினைகள்கூட பல மற்றுப் போகும். ஆகவே நம்மீது யாரோ விதியை திணிக்கிறார்கள் என்ற மயக்கத்தை தூ எறிந்து விட்டு நம் விதியை நாமே உண் டாக்குகிறோம் என்ற தெளிதல் வேண்டும். அதுவே இந்த நோய்களிலிருந்து விடுபடுதற்கான சரியான வழியாகும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடலே அமைந்துள்ளது.

அ.பொ.

அரம்-அராவும் தேய்க்கும் கருவி. கிளை-உறவினர். தொண்டு - தொண்டு செய்பவர் வேலையாட்கள். மாறாய்-பகையாகி. சுரம்-நஞ்சு. கள்ளநோய்-வஞ்சனையாகிய பிணி. அயல்-அக்கம் பக்கம் இருப்பவர்.

நல்லவை செய்தால் நலமெல்லாம் வரும்...

62. நீர்அறம் நன்று நிழல்நன்று தன்இல்உள்
பார்அறம் நன்று பாத்துஉண்பானேல்-பேரறம்
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றுமாம் சால உடன்.

விளக்கவுரை

தவிக்கும் வாய்க்கு தண்ணீர் வழங்குதல் நற்செயலாகும். கொடிய சூட்டினால் தவிப்பவர்களுக்கு தங்க நிழல் அமைப்பது தருமமாகும். தன் வீட்டில் மழை வெள்ளம் போன்ற துயரம் மிகுந்த நாட்களில் மற்றவர்கள் வந்து தங்க இடம் கொடுத்து உதவுதல் புண்ணியம் ஆகும். மற்றவர்களோடு பகிர்ந்துண்டு வாழ்தல் மிகப் பெரிய அறச் செயலாகும். இதோடு மக்கள் வழிபட ஆலயம் அமைத்தல், மக்கள் வந்து போக சாலை அமைத்தல் போன்ற நற்பணிகளைச் செய்பவர்கள் பேரின்ப பெருவாழ்வை வெகுவிரைவில் பெறுவார்கள் என்றுஇப்பாடல் கூறுகிறது.

மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன்மூலமே நாம் நன்மையைப் பெறமுடியும். தெய்வத்திற்கு இருக்கும் எல்லா ஆற்றல்களும் சாத்தானுக்கும் உண்டு. ஒரே ஒரு வேறுபாடு தான் தெய்வத்திடம் சுயநலம் இல்லை. சாத்தான் சுயநலமே உழவானது அதனால்தான் இறுதிவரை அது சாத்தானாகவே இருக்கிறது. சுயலநம் உள்ளவர்கள் அனைவரும். சாத்தான் வடிவங்களே அவர்களுக்கு துன்பம் தொடரும். ஆகவே, நன்மைகளை பிறருக்கு செய்து புண்ணியத்தை அதிகரித்துக் கொண்டால் கடந்த கால தீவினைகள் அனைத்தும் சாம்பலாகி விடும். தெய்வத்தின் அருள் கை கூடும். நாமே தெய்வத்தின் கூறு என்கிற மெய்ஞானம் வெளிப்படும். ஏழை எளியவர்கள். நசுக்கப்பட்டோர், நோயாளிகள் போன்ற அனைவரையும் காப்பாற்ற நீங்கள் உதவிகளை செய்து கொண்டே போங்கள். உங்கள் வாழ்க்கையை இறைவன் கவனித்துக் கொள்வார். இதுவே வேததத்துவம். இதுவே உயர்தத்துவம். சிறுபஞ்சமூலம் கூறும் நீதியும் இதுவே. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

இல்உள்-வீட்டில். பார்அறம்-மற்றவர்கள் தங்க இடம் தருதல். பாத்துண்ணல்-பகிர்ந்து கொடுத்து உண்ணல். தளி-கோயில். நாட்டாள்-

உண்டாகிடுதல். பெரும் போகம்-பேரின்பம். ஒன்றும்-வந்தடையும். சால-மிகுதியாக. உடன்-உடனடியாக. அறம்-நற்செயல்.

குறைவே ஆனாலும் கொடுப்பதே சிறப்பு

63. பிடிப்பிச்சை, பின்இறை ஐயம்கூழ் கூற்றோடு
எடுத்து இரந்து உப்பித்துணையோடு-அடுத்துச்
சிறுபயம் என்னார் சிதவலிப்பு ஈவார்
பெறுபயன் பின்சாலப் பெரிது.

விளக்கவுரை

ஒரு கைப்பிடி, அளவு பிச்சைச் சோறு. அல்லது கைவிரல் இருக்கில் வழியும் சோற்றுப் பருக்கை, சோற்றுப் பருக்கை இருக்கிறதோ இல்லையே என்று ஐயப்படவைக்கும் கூழ் உணவு இவற்றைப் பெற அம்மா... தாயே... பிச்சை என்று கூவி கூக்குரலிடும் சொல்லையும், பிச்சை ஏற்கும் திரு ஓட்டையும் ஏந்து பலருக்கு அற்பம் என்றாலும் அளித்திட வேண்டும். அதனால் வரும் பயன் மிகப் பெரியதாகும் என்ற இப்பாடலே கூறுகிறது.

கொடுப்பது குறைவே ஆனாலும் மனம் கொடுக்க வேண்டும் நினைக்கிறது அல்லவா...? அதற்கு மிகுந்த சக்தி உண்டு அதனால்தான் மனம் போல் வாழ்க்கை என்று சொல்லியிருக்கிறார்கள். இரக்கமில்லா மனம் படைத்த வர்கள் விலங்கினும் கீழானவர்களே. இறைவன் கருணையே வடிவானவள். அதேபோல் இறைவனால் படைக்கப்பட்ட மனிதனும் கருணையுடையவனாக மாறினான். அவனும் இறைவன் ஆவான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இறைவன் இருக்கிறான். மனம் கெட்டுப் போயிருப்பதால் மனிதனால் இறைவனைக் காணமுடியவில்லை. ஆகவே, மனதை தூய்மைப்படுத்தவேண்டும். நல்ல சிந்தனை, இரக்கம், தெய்வபக்தி போன்றவைகளை செய்ய செய்ய மனம் தூய்மையாகும். இந்த தூய்மை வந்து விட்டால் உங்களுக் குள்ளே இருக்கும் இறைகாட்சியைக் காணமுடியும். ஆகவே, குறைவாகவே இருப்பினும்கூட மற்றவர்களுக்கு வழங்குங்கள். அந்தப் புண்ணியம் மிகப் பெரிதாக வளர்ந்து சகல நன்மை களையும் உங்களுக்கு வழங்கும் என்பது கருத்து.

அ.பொ.

பிடி-கைப்பிடி. இரை-விரல் இடுக்கு. ஐயம்-சந்தேகம். கூற்று-ஒடு. கூற்றோடானது. கூற்று-சொல். பிச்சைச் கேட்பவர் கூவும் ஒலி. ஒடு-

பிச்சைப் பாத்திரம். இரந்து-பிச்சைக் கேட்டு. உப்பித்து-உப்பளவு. சிறுபயம்-அளவில் சிறிதான பயன். சிதவலிப்பு-மனவலி. சால-மிகவும் பின்னர் பயன் பெறுதல் என்பது பிச்சைப் பெற்றவர் பசியடங்கி வாழ்த்து தலாய வரும் பயன் எனக் கொள்ளலாம்.

அளவு பெரிதல்ல... மனமே பெரிது

64. வெம்தீக்காண் வெண்ணெய் மெழுகுநீர்சேர் மண்உப்பும்
தன்மகன் சார்ந்த தந்தைஎன்ற-ஐந்தினுள்
ஒன்றுபோல் உள்நெகிழ்ந்து ஈயின் சிறிதெனினும்
குன்றுபோல் கூடும் பயன்.

விளக்கவுரை

மிகவும் வெப்பச் சூடுடைய நெருப்போடு சேர்ந்த வெண்ணெயும், மெழுகும் நெருப்பில் கலந்து உருகும். மண்ணும், உப்பும் நீரில் கலந்து ஒன்றாகி விடும். தன் மகனோடு சேர்ந்து மகிழ்ந்திருக்கிற தந்தை ஒன்றுபட்டு இருப்பர். அதேபோல் இல்லையென்று வருவோர்க்கு இல்லை என்று கூறாமல் இன்முகத்தோடு மனம் நெகிழந்து கொடுத்து உதவுவது அளவில் சிறிதே என்றாலும், அதனால் பெறும் பயன் மிகப் பெரியது என்று சிறுபஞ்சமூலம் கூறு கிறது.

பிறருக்கு கொடுக்கும் செல்வம் மிகக் குறைவாக இருந்தாலும் அது பல மடங்காகிப் பெருகி நம்மிடமே வருகிறது. அதேபோல் தீய செயல் சிறிது செய்தாலும் பலமடங்கு பெருகி நம்மைத் தாக்குகிறது. இதை சரியாக புரிந்து கொண்டால் மற்றவருக்கு தீமை செய்யும் எண்ணம் தோன்றாது. நாம் உண்மையில் தெய்வத்தின் கூறுகள். நமக்கு நோய் இல்லை. மாணம் இல்லை. நாம் அளவற்ற வலிமை படைத்தவர்கள். ஆனால், அதை மறந்து விட்டோம். அற்பத்தனமான சுஹநலத்தின் பிடியில் சிக்கி நமக்கு நாமே துன்பத்தை வரவழைத்துக் கொள்கிறோம். முன் வினைப் பயனால் நமக்கு இப்போது துன்பம் வந்திருக்கிறது என்றால், நல்வினைகளை செய்து அதை மாற்றவும் நம்மால் முடியும். தீயவினைகள் நம்மீது கொடிய புலிபோல் பாய்வதற்கு தயாராக நிற்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அதே சமயம் நாம் செய்த நல்வினைகள் ஆயிரக்கணக்கான தேவ தூதர்களாக நம்மைக் காக்கவும் தயாராக நிற்கின்றன என் பதை மறவாதீர்கள். செல்வம் சிறிதுதானே இருக்கிறது என்று தயங்க வேண்டாம் பொருள் பெரிதல்ல... மனமே பெரிது.

ஆகவே, இருப்பதை கொடுங்கள். மனத்தை ஆலயமாக்குங்கள். அனைத்து நன்மைகளும் தானே வரும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

வெம்-வெப்பம் மிகுந்த. சார்ந்த-சேர்ந்த. நெகிழ்ந்து-இரக்கப்பட்டு. ஈயின்-கொடுத்தால். கூடும்-சேரும்.

சமுதாயத்திற்கு பணி செய்க

65. குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து
உளம்தொட்டு உழுவயல் ஆக்கி-வளம்தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்றுஇவ்ஐம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கத்து இனிது.

விளக்கவுரை

தண்ணீருக்காக குளம் வெட்டுபவன், இடையூறு தரும் மரங்களை சரிசெய்து நடக்கும் வழியை சீர்செய்பவன். தரிசு நிலத்தை விளைநிலமாக மாற்றுபவள். சுற்றுச் சுவருடன் கூடிய கிணறு அமைப்பவர் ஆகிய சமுதாயப் பணிகளைச் செய்பவள் சுவர்க்கம் செல்வாள் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

தொட்டு-தோண்டி. கோடு-மரக்கிளை. சீத்து-சீர் செய்து. உளம் - தரிசு நிலத்துள் உள்ள நிலம். வளம் தொட்டு-வளம் பெருக்கி. பாகு-கரை. படும்-உண்டாக்கும். கிணற்றொடு-கிணறுடன். பாற்படுத்தான்-பகுதிகளை அமைத்தவன்.

எது துறவு?

66. போர்த்தும் உரிந்திட்டும் பூசியும் நீட்டியும்
ஓர்த்து ஒருபால் மறைத்துஉண்பான்மேய்-ஓர்த்த
அறமாம் மேற்சொல் பொறுக்கல்அன்றேல் கலிக்கண்
துறவறம்பொய் இல்லறமே வாய்.

விளக்கவுரை

உடல் முழுவதும் துணி போர்த்திக் கொள்ளுதல். துணியே இல்லாது இருத்தல். திருநீறு பூசிக் கொள்ளல், சடைமுடி வளர்த்தல், உடலின் ஒரு பகுதி மறைத்தல் ஆகிய ஐந்தும் துறவிக்குரிய தவ வேடங்கள் என்று சான்றோர் கூறுவர். இந்த தவ வேடம் மட்டும் போதாது. உலகோர்

கூறும் பழிச் சொற்களை தாங்கிக் கொள்ளவேண்டும் உலகம் பழிக்கு விஷயங்களை செய்தலும் கூடாது. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

உரிதல்-நீக்குதல். நீட்டியும்-தலைமுடி. தாடி நீளச் செய்து. ஓர்த்து-ஆராய்ந்து. ஒருபால்-உடலில் ஒரு பகுதி. மேய்-மேவி. மேல் சொல் அறம்-மேலோர் சொன்ன நன்னெறி. பொறுக்கல் அன்றேல்-பிறர் கூறும் பழியை தாங்கிக் கொள்ள இயலாதபோது. கலிக்கண்-இக்கலிகாலத்தில். துறவறம்-துறவறம் என்று கூறிக் கொண்டு போடும் தவவேடம். இல்லறம்-இல்வாழ்க்கை. மெய்-உண்மை, மேலானது.

பிறர் போற்றும்படி வாழ்க...

67. தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிறரால் கருதற்பா டுணர்ந்து-தான்பிறரால்
சாவஎன வாழான் சான்றோரால் பல்யாண்டும்
வாழ்கஎன வாழ்தல் நன்று.

விளக்கவுரை

தன்குடி புகழை எப்போதும் காப்பது. எப்போதும் ஒழுக்கம் தவறாமல் வைராக்கியத்துடன் வாழ்வது, பிறர் மதிக்கும்படி நல்ல செயல்களையே செய்தல் செத்தொழிக என்று பிறர் பழிக்கா வண்ணம் செயல்படுதல். பல்லாண்டு வாழ்க என பலரும் வாழ்த்த வாழ்தல் ஆகிய இவை நல்ல வாழ்வுக்கான அடையாளங்கள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

இல்-வீடு. கடைபிடித்து-மேற்கொண்டு. கருதற்பாடு-மதிக்கப் படுதல். பல்யாண்டு-பல ஆண்டுகள்.

புலனடக்கமே துன்பம் நீக்கும்வழி

68. நெடுக்கல் குறுக்கல் துறைநிர் நீராடல்
வடுதீர் பகல் வாயுறையே-வடுத்தீரா
ஆகும்அந் நான்கொழித்து ஐந்தை அடக்குவானாகின்
வேகும்பம் வேண்டான் விடும்.

விளக்கவுரை

நீண்ட சடை வளர்த்தல், அல்லது குறுக குறைத்தல், அல்லது மொட்டையடித்துக் கொள்ளுதல், புண்ணியம்

வேண்டி புனித நீர்த் துறைகள் தோறும் நீராடுதல் குற்றம் இல்லாதவகையில் (அதாவது தவஒழுக்கம் கெடாதவைவரை யில்) ஒருவேளை உணவே அதுவும் பகல்பொழுதில் மட்டுமே உண்ணுதல் என்னும் குற்றம் இல்லாத இந்நான்கும் தவிர்த்து ஐம்புலன்களை அடக்கி ஆளும் வல்லமை உடையவன். ஆனால், அவன் உடமபு ஈமத் தீயில் வேகும் நிலையிலிருந்து விடுபடும். சுடுகாட்டு நெருப்பில் அவன் உடல் சுட்டெரிக்கப் படாது. அதாவது அவனுக்கு மறுபிறவி இல்லை என்பதாம்.

அ.பொ.

நெடுக்கல்-நீட்டுதல். குறுக்கல்-குறைத்தல். துறை-நீராடும் இடம். நீராடல்-அதிக அளவில் புனித தீர்த்தங்களைத் தேடிப் போதல். வடு-குற்றம். வாயுறை-உணவு. ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தின்வழி எழும் ஆசை. வே-சுடுகாட்டில் வேகும். கும்பம்-குடம், உடலை குடமென்று சொல்லுதல் மரபு. வேண்டான்-விரும்பாதவனாகி. விடும்-விடுபடுவான்.

இந்த ஐவருக்கு பாவத்தில் பங்குண்டு...

69. கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்-கொன்றதனை
அட்டான் இடஉண்டான் ஐவரினம் ஆகும்எனக்
கட்டெறிந்த பாவம் கருது.

விளக்கவுரை

ஒரு உயிரைக் கொல்பவன். கொல்வதற்கு துணையாக இருந்தவன். கொஞ்சம்கூட கூசாமல் கொன்ற உயிரின் தசையை விலைக்கு வாங்கிக் கொண்டவன். கொன்ற உயிர் தசையை சமைத்தவன். சமைத்த உணவை உண்டவன் ஆகிய ஐவரையும் பாவம் மற்றும் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

கோடாது-மனக்கோட்டம் கொள்ளாமல் நாணல். அட்டான்-சமைத்தவன். இட-தா. சுட்டு-நீதி நூல் வகுத்த எல்லை. எறிந்த-அழித்த. கருது-நினைத்துக் கொள்.

சோறு தந்தோர் சுகம் பெறுவர்

70. சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநாள்
உறைக்கிடந்தார் ஒன்று இடையிட்டுஉண்டபார்-பிறைக்கிடந்து
முற்றனைத்தும் உண்ணாதவர்க்கு ஈந்தார் மன்னவராய்க்
கற்றனைத்தும் வாழ்வார் கலந்து.

விளக்கவுரை

சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கும், இறந்து மறைந்த மூதாதையர் நற்கதிபெற விரதம் இருப்பவர்களுக்கும். பல நாட்களாக நோயுற்று மருந்துண்ணும் பத்தியம் காரணமாக உண்ணாது இருந்தவர்களுக்கும். ஒருநாள் விட்டு ஒருநாள் (விரதம் காரணமாக) உண்ணாமல் இருந்தவர்களுக்கும், முதல் பிறை நாளில் இருந்து, முழு நிலவு, பௌர்ணமி வரை உண்ணா நோம்பிருந்தவர்க்கும் உணவு தந்து உதவியவர்கள் நீதி நூல்கள் அனைத்தும் கற்றறிந்தவரோடு கலந்து மன்னராய் வாழ்வர் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

அ.பொ.

நோற்பார்-விரதமிருப்போர். உறை-மருந்து. கிடந்தார்-மருந் துண்டு நோய்படுக்கையில் கிடந்தவர். பிறை-அமாவாசையை அடுத்து வரும் முதல் பிறை நாள். முற்றனைத்தும்-முடியும் மட்டும் முழு நிலா நாள்வரை. ஈந்தார்-கொடுத்தவர்.

இவையே நல்லறங்கள்

71. ஈன்றெடுத்தல் சூல் புறம்செய்தல் குழவியை
ஏன்றெடுத்தல் சூல்ஏற்ற கன்னியை-ஆன்ற
அழிந்தாளை இல்வைத்தல் பேர்அறமா ஆற்ற
மொழிந்தார் முதுநூலார் முன்பு.

விளக்கவுரை

பெற்ற குழந்தையை கவனமுடன் வளர்த்தல். குழந்தை பிறக்கஉதவுதல். அநாதை குழந்தைகளை வளர்த்தல். கர்ப்பிணி களைக் காத்தல். கைம்பெண்களை தன் வீட்டில் வைத்துக் காத்தல். இவை மிகப் பெரிய அறம் என்று கற்றறிந்த பெரி யோர்கள் வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள் இப்பொரு ளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

சூல்-கர்ப்பம். புறம்செய்தல்-பிள்ளைப் பேறு பார்த்தல். குழவி-குழந்தை. ஏன்று எடுத்தல்-கண்டெடுத்து வளர்த்தல். ஆன்ற-மிகவும். அழிந்தாள்-கணவனை இழப்பவள். இல்-வீடு. பேர்அறம்-பெரிய அறம். ஆற்ற-மிகவும் உறுதியாக. மொழிதல்-கூறுதல். முதுநூலார்-பழம் பெரும் இலக்கியங்களை கற்றுணர்ந்தவர்கள்.

இவை இன்றியமையாதவை

72. வலிஇழந்தார் மூத்தார் வடக்கிருந்தார் நோயால்
நலிபழிந்தார் நாட்டறைபோய் நைந்தார்-மெலிவொழிய
இன்னவராம் என்னார்ஆய் ஈந்த ஒருதுற்று
மன்னவராச் செய்யும் மதித்து.

விளக்கவுரை

வலிமை அற்றவர்கள், வயதால் மூப்படைந்தோர். வடக்கு நோக்கி உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டோர். உடல் பிணியால் நலம் கெட்டோர் நாடு விட்டு நாடு சென்று நலிவடைந்தோர், என்றும் இவர்கள் தளர்ச்சி நீங்க இத்தகையோர் யார் என்று ஆராயாமல் ஒரு உருண்டை சோறு கொடுத்து உதவுபவர். மறுபிறவியில் மன்னராகி பெருமை பெறுவர் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

என்னார் ஆய்-இன்னார் இவரென்று ஆராயாமல். துற்று-கவனம் சோறு.

இவையே பெருமை

73. கலங்காமை காத்தல் கருப்பம் சிதைந்தால்
இலங்காமை பேரறத்தால் ஈற்றம்-விலங்காமைக்
கோடல் குழவி மருந்து வெருட்டாமை
நாடின் அறம்பெருமை நாட்டு.

விளக்கவுரை

வயிற்றில் உருவாகி வளரும் கருவுக்கு கேடு வராமல் காப்பாற்றுதல். கருச்சிதைவு ஏற்பட்டால் பெரிய அறமாக அதனைப் பிறர்க்கு வெளிப்படாமல் மறைத்து விடுதல். குழந்தை குறுக்காகி விடாமல் பார்த்துக் கொள்ளுதல். குழந்தைக்கு நோய் கண்டபோது தக்க மருந்து ஊட்டுதல். வீணாக பயமுறுத்தாமல் இருப்பது ஆகிய ஐந்தும் மிகப் பெருமைக்குரியவை என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

கலங்காமை-அழியாமை. இலங்காமை-வெளியே தெரியாமல். பேர் அறம்-பெரிய நற்செயல். ஈற்றம்-ஈனுதல். விலங்காமை-குறுக் கிடாது. கோடல்-பார்த்துக் கொள்ளுதல். வெருட்டாமை-அச்சுறுத் தாமை. நாடின்-ஆராய்ந்தால். அறம்-நற்செயல். நாட்டு-நிலை நாட்டு.

இது பெருந் துன்பம்

74. சூலாமை சூலில் படுந்துன்பம் ஈன்றபின்
ஏலாமை ஏற்றால் வளர்ப்பு அருமை-சால்பவை
வல்லாமை வாய்ப்ப அறிபவர் உண்ணாமை
கொல்லாமை நன்றால் கொழித்து.

விளக்கவுரை

குழந்தைப் பேறில்லாமல் துன்பம், பெறும் காலத்தில் துன்பம். பெற்ற குழந்தையை ஏற்காமை. ஏற்று வளர்க்கும் காலத்தில் வரும் துன்பம். வளர்ந்த குழந்தை நல்ல குணம் இல்லாதிருக்க கவலை ஆகிய இந்த ஐந்துவகை துன்பங்களிலும் பிறப்பினால் வருபவை. பிறப்பு எதனால் வருகிறது? தீவினையால் ஆகவே, உயிர் கொலை செய்யாமலும், புலால் உண்ணாமல் இருப்பதும் நல்லது என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

சூலாமை-குழந்தைப் பேறின்மை. சூலில்-கருவுற்ற காலத்தில். ஈன்றபின்-குழந்தை பெற்ற பிறகு. ஏலாமை-ஏற்காமை. சால்பவை-நற்குணங்களைவற்றில். வல்லாமை-சிறந்து விளங்காமை. வாய்ப்ப-நன்று. நல்லது. ஆல்-அசை. கொழித்து-தெளிந்து.

இவர்கள் கொடுத்து வைத்தவர்கள்

75. சிக்கர் சிதடர் சிதலைப்போல் வாய்உடையார்
துக்கர் துருநாமர் தூக்குங்கால்-தொக்க
அருநோய்கள் முன்னாளில் தீர்த்தாரே இந்நாள்
ஒருநோயும் இன்றி வாழ்வார்.

விளக்கவுரை

தலையில் நோய்த் துன்பம் உடையவர்கள். மனநலம் குன்றியவர்கள். வாய்ப்புற்று நோய் கண்டவர்கள். காச நோய்கள். மூலநோய் உள்ளவர்கள். எத்தகைய மருந்தாலும் தீராத நோய்கண்டவர்களுக்கு உணவும், மருந்தும் தந்து உதவி அந்த நோய்த் துன்பத்தை தணித்தவர்களே இந்நாளில் எந்தஒரு நோய்க்கும் ஆளாகாமல் வாழ்கின்றனர் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

சிதல்-கரையான். சிதலைப்போல் வாயுடையோர்-கரையான் புற்றுபோல் வாயில் புற்று நோய் உடையவர். தூக்குங்கால்-சீர்தூக்கிப் பார்க்கும்போது.

இவை இல்வாழ்வார் கடமை

76. பக்கம் படாமை ஒருவர்க்குப் பாடேற்றல்
தக்கம் படாமை தவம்அல்லாத்-தக்கார்
இழிஇனர்க்கே யானும் பசித்தார்கண் ஈதல்
கழிசினம் காத்தல் கடன்.

விளக்கவுரை

ஒருவர் சாப்பாக இல்லாமல் நடுவு நிலையாக இருத்தல். பிறர்படும் துன்பத்தைப் போக்குதல். உலகியலில் பற்று வைக்காதிருத்தல். இவை தவம் செய்வோர்க்குள்ள பண்புகள். தவம் செய்யாத இல்லற வாழ்வில் ஈடுபட்டிருக்கும் தகுதி உடையவர்களுக்கு தாழ்ந்த குலத்தவர் ஆயினும், அவர்கள் பசித்திருக்கக் கண்டால் அவர் பசித்தீர உணவளித்தல். பொங்கி எழும் கோபத்தை அடக்கிக் கொள்ளுதல் ஆகிய இவை கடமையாகும்.

அ.பொ.

அல்லா-அல்லாத. தக்கார்-தகுதியுடைய இல்வாழ்வோர். இழி இனம்-தாழ் குலத்தவர் (இழி இழிந்த இனம் குலம்). கழி-மிகுந்த. சினம் - கோபம். காத்தல்-வராமல் காத்துக் கொள்ளுதல்.

உயர்வு அடையும் வழி

77. புண்பட்டார் போற்றுவார் இல்லதார் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டும் இல்லாதார்-கண்கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்குஈந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து.

விளக்கவுரை

போர்க்களம் சென்று போரிட்டு காயம்பட்டவர்களை ஆதரிப்போர். துணையின்றி தவிப்பவர்கள். உயிர் விடும் நிலையில் மரணப் படுக்கையில் இருப்பவர்கள். கண்ணிரண்டும் பார்வை யிழந்தவர்கள். இருகால்களும் இல்லாது முடமானவர்கள் என்றுள்ள இவர்களிடம் இரக்கம் கொண்டு, அன்பு செலுத்தி உணவு முதலிய கொடுத்து உதவியவர்கள் தங்கள் வாழ்வில் புகழுடன், செல்வம், செல்வாக்குப் பெற்று வாழ்வர் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

புண்பட்டவர்-காயம் அடைந்தவர்கள். போற்றுவார்-ஆதரிப்பார். போகுயிரார்-உயிர் விடும் நிலையில் இருப்போர். கண்-இவர்களிடம்.

இவர் நூறாண்டு வாழ்வர்

78. பஞ்சப் பொழுதகத்தே பாத்துண்பான் காவாதான்
அஞ்சாது உடைபடையுள் போந்தெறிவான்-எஞ்சாதே
உண்பது முன்ஈவான் குழவி பலிகொடுப்பான்
எண்பதின் மேலும் வாழ்வான்.

விளக்கவுரை

வறண்ட பஞ்ச காலத்தில் தன் சேமிப்பில் இருக்கும் உணவுப் பொருள்களை பிறர்க்கு கொடுத்து பகிர்ந்துண்டு வாழ்பவன். அக்காலத்தில் தனக்கென்று சேர்த்து வைத்துக் கொள்ளாதவன். அச்சம் என்பது ஒரு துளியும் இல்லாமல் பகையை வென்று தனி பாடலை காப்பாற்றுபவன். நாள் தோறும் பிறருக்கு கொடுத்த பிறகே தான் உண்பவன். பச்சிளங் குழந்தை பசி போக சோறளிப்பவள் ஆகிய இந்த ஐந்து பேர்களும் என்பது ஆண்டுகளுக்கும் மேலாக இனிதே வாழ்வர் என்று இப்பாடல் கூறுகிறது.

அ.பொ.

பஞ்சப் பொழுது-பஞ்சக் காலம். பாத்துண்ணல்-பகிர்ந்துண்ணல். காவாதான்-தனக்கென்று சேமித்து வைத்துக் கொள்ளாதவன். உடை படையுள்-தோற்றோடும் படை நடுவில். போந்து-புகுந்து. எறிவான்-பகைவர் படையை தோற்றோட செய்பவன். எஞ்சாதே-நாள் தவறாது. உண்பது முன்-உண்ணும் முன். குழவி-குழந்தை. பலி-சோறு.

அறிஞர் செய்யாதவை

79. வரைவில்லாப் பெண்வையார் மன்னைப் புற்றுஏறார்
புரையில்லார் நள்ளார்போர் வேந்தன்-வரைபோல்
கடும்களிறு விட்டுழிச் செல்லார் வழங்கார்
கொடும்புலி கொட்கும் வழி.

விளக்கவுரை

பொது மகளிரை தமக்கு மனைவியாக அறிஞர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பாம்பு புற்றின் மீது ஏற மாட்டார்கள். தன்னோடு ஒத்தவர்களுடன் அல்லாமல் மற்றவர்களுடன் நட்பு கொள்ளமாட்டார்கள். அரசர்களின் மாலை போன்ற, கடும் குணமுடைய யானையை அவிழ்த்து விட்ட இடத்திற்கு செல்லமாட்டார்கள். புலி உலவும் காட்டு வழியே அறிஞர் பெருமக்கள் செல்லமாட்டார்கள் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

அ.பொ.

புரை இல்லார்-ஒப்பாகாதவர். நன்னார்-நட்புக் கொள்ளாதவர். வரை-மலை. கடும்-கடுமையான. களிறு-யானை. விட்டுழி-விட்டிருக்கும் இடம். வழங்கார்-செல்லார். கொட்டும்-திரியும். வழி-காட்டில்.

இனத்தளவே புகழ்-மனத்தளவே மதிநுட்பம்

40. தக்கார் வழி கெடாதுஆகும் தகாதவர்
உக்க வழியராய் ஒல்குவர்-தக்க
இனத்தினான் ஆகும் பழியும் புகழும்
மனத்தினான் ஆகும் மதி.

விளக்கவுரை

நற்குணங்களால் தகுதி பெற்ற நல்லவர்களின் குலமுறை அழியாது. மல்கி பெருகும். தகுதியற்ற அற்பர்கள் குலம் கெட்டு அழியும். கீழ்மை அடையும் ஒருவனுக்கு அவன் சார்ந்த இனத்துக்கு ஏற்பவே பழியும் புகழும் உண்டாகும். நல்லறிவு என்பது அவன் மனத்தால் அமையும் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

நற்குணங்கள் எதனால் அமைகிறது, நல்வினைப் பயனால் வருகிறது. ஆகவே, இப்போது நம் நிலை எப்படி இருந்தாலும் நல்ல செயல்களை மலைபோல் குவித்தால் எல்லா குண நலன்களும் நமக்கு வரும். நம் குலம் தழைக்கும் ஒரு மனிதன் யாரிடம் சேர்கிறானோ அவனுடைய குணமே அவனிடம்சேரும் அதனால்தான் சதிசங்கம் வேண்டும் என்றனர். ஒரு மகானிடம் தொடர்பு வைத்தால் சண்டாளன் கூட புனிதமாகி விடுவான். ஆகவே, எல்லா ஆற்றல்களும் நமக்குள்ளேயே இருக்கின்றன என்பதில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

பயிற்சியால் எப்படிப்பட்ட மனத்தையும் தூய்மை யாக்கிவிட முடியும். மதிநுட்பம் என்பது மனத்தால் வருவது என்று கூறப்பட்டது. இதன் பொருள் என்ன? மனம் தூய்மை யடைந்தால் எல்லா மெய்ஞானமும் விளங்கும் என்பதுதான். மெய்ஞானம் என்பது நாம் அனைவரும் தெய்வத்தின் கூறுகள் என்பதை அறிதல் ஆகும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

தக்கார்-தகுதியுடையவர். வழி-குலம். கொடாதாகும்-அழியாது வளரும். உக்க-அழியும். வழியராய்-நிலைமை உடையவராய். ஒல்குவர் - தாழ்ச்சி அடைவர். மதி-அறிவு.

வானவர் போற்றும் வித்தை

81. கழிந்தவை தான்இரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை இன்புறான் இல்லார்-மொழிந்தவை
மென்மொழியால் உள்நெகிழ்ந்து ஈவானேல் விண்ணோரால்
இன்மொழியால் ஏத்தப் படும்.

விளக்கவுரை

தன்னை விட்டு போனப் பொருள்களைப் பற்றி கவலைப் படமாட்டான். தனக்கு எட்டாத பொருள்களை விரும்ப மாட்டான். இழிவானவைமேல் விருப்பங்கொண்டு இன்பம் அடையமாட்டான். இல்லாதவர்கள், வறியவர்கள் விரும்பிக் கேட்ட பொருளை இனிமையான சொற்கள் பேசி கொடுப் பான். இத்தகையவர்களை தேவர்கள் இன்சொல்கூறி போற்றி பாராட்டுவர். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கழிந்தவை-தன்னை விட்டுப் போனவை. இரங்குதல்-வருந்துதல். கைவாரா-கிட்டாத. இல்லார்-வறியவர்.

அறிவுரைகள் தேவையில்லை

82. காடுபோல் கட்கினிய இல்லம் பிறர்பொருள்
ஓடுபோல் தாரம் பிறந்ததாய்-ஊடுபோய்
கோத்துஇன்னா சொல்லானாய்க் கொல்லானேல் பல்லவர்
ஒத்தினால் என்ன குறை.

விளக்கவுரை

கண்ணுக்கு இனிமையாக விளங்கும், விருந்தாக அமை யும் அழகிய பெரிய அரண்மனை போன்ற வீட்டை காடு போல் நினைத்து ஒதுக்குபவன். மற்றவன் மனைவியை தன்னைப் பெற்ற தாயாகக் கருதுபவன். மற்றவர் நடுவே சென்று பழிசொற்களை கூறாதவன். உயிர் கொலை செய்யா தவன் ஆகிய நற்பண்புகளுடன் ஒருவன் வாழ்வானே யானால் பல நூல் கற்ற பெரியோர்கள் ஆக்கி வைத்துள்ள நூல்களால் அவன் அறிய வேண்டியது என்ன உள்ளது? ஒன்றும் இல்லை. இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

இல்மை-வீடு. ஓடு-உடைந்த மண் சட்டியில் சில, சில. தாரம்-மனைவி. ஊடுபோய்-இடையில் சென்று. கோத்த-தொடுத்து. இன்னா-தீதான. பல்லவர்-பல நூல் கற்றவர். ஒத்து-நூல்.

நன்னெறியாளர் நாடாதவை

83. தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டவர் உண்ணார் பழிபாவம்-பாற்பட்டார்
ஏற்றுஅவாது இன்புற்று வாழ்வன ஈடழியக்
கூற்றுஉவப்பச் செய்யார் கொணர்ந்து.

விளக்கவுரை

தோலில் வைக்கோல் பொதிந்து பொய்யாக கன்று போல் தோன்றும் தோல் கன்றைக் காட்டி (கன்றை ஊட்ட விட்டால் பால் குறைந்து விடும் என்று) பசுவிடம் நன்னெறி யாளர்கள் பால் கறக்க மாட்டார்கள். அவ்வாறு கறந்த பாலை நன்னெறி செல்வர்கள் குடிக்கவும் மாட்டார்கள். பழிபாவம் வரக்கூடிய உயிர்க் கொலையை நன்னெறி செல்பவர்கள் செய்ய மாட்டார்கள். இப்பொருளில் இப் பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

சமயம்-வழிபாட்டு முறை. வித்தகர்-லோன. அறிவுடையோர் வீடு-வீடு பேறு. ஆங்கு-அசை. அத்தகத்து-அத்தகைய. அத்தம்-முடிவு. சிந்திப்பின்-சிந்தித்தால். சிட்டன்-சீடன்.

இவை பிழையானவை

84. நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரை என்றைந்தும்-தொகையொடு
மூத்தோர் இருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தார் அறிந்தவர் ஆய்ந்து.

விளக்கவுரை

பெரியோர்கள் கூடியும் இடத்தில் காரணமின்றி சிரிப் பது, இரகசியம் பேசுவது. நண்பர்களுக்கு சாதகமாக வாதி டுவது, பகைவர்க்கு எதிராகச் சொல்லுதல். பாடலுக்குப் புதிதாக விளக்கம் கூறுதல் ஆகிய ஐந்தும் வேண்டப்படாத குணங்களாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

மந்திரம்-பேச்சு. (இது பல) முன் ஒருவரிடம் ரகசியம் பேசு வதை குறித்தது). நட்டார்-நண்பர். பாட்டுரை-பாடலுக்கு விளக்கம். தொகை-கூட்டம். மூத்தோர்-அறிவில் முதிர்ந்த பெரியோர். இருந்துழி - இருக்குமிடத்தில். முதுநூல்-பழம் பெரும் இலக்கியங்கள். யாத்தார்-இயற்றியவர். அறிந்தவர்-கற்றுணர்ந்தவர். ஆய்ந்து-ஆராய்ந்து.

யார் நல்ல சீடன்...?

85. சத்தம் மெஞ்ஞானம் தருக்கம் சமயமே
வித்தகர்கண்ட வீடுஉள்ளிட்டு ஆங்கு-அத்தகத்து
அந்தம்இவ் ஐந்தும் அறிவான் தலையாய
சிந்திப்பின் சிட்டன் சிறந்து.

விளக்கவுரை

இலக்கண இலக்கியம், ஞான நூல் தருக்க நூல், வீட்டு நூல் என்னும் ஐந்தும் முற்றாக கற்றவளே சிறந்த சீடனாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

சமயம்-வழிபாட்டுமுறை. வித்தகர்-மேலான அறிவுடையீர். வீடு-வீடு பேறு. ஆங்கு-அசை. அத்தகத்து-அத்தகைய. அந்தம்-முடிவு. சிந்திப்பில்-எண்ணினாய். சிட்டர்-சீடன்.

இடைப்பட்டவன் இவன்

86. கண்ணுங்கால் கண்ணும் கணிதமே யாழினோடு
எண்ணுங்கால் சாந்துஇலை நறுக்கிட்டு-எண்ணுதல்
இட்ட இவ்ஐந்தும் அறிவான் இடையாய
சிட்டன்என்று எண்ணப் படும்.

விளக்கவுரை

சிந்தித்துப் பார்க்கும் போது கருதத்தக்க கணித நூல் கல்வியில் அறிவு, யாழிசையில் ஞானம், சந்தனம் அளாத்தல், இலை நறுக்குதல், எண்ணி சரிபார்த்தல் ஆகிய இந்த ஐந்தும் அறியப் பெற்றவள் இசைநிலை சீடன் ஆவான். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

இட்ட-ஏற்படுத்தப்பட்டன. இடையாய-இடை நிலையில் உள்ள சீடன். சீடன் கணிதநூல், யாழிசை, சந்தனம் அளாத்தல், இலை நறுக்குதல், எண்ணுதல் (பூசைக்கு) இவை அறிந்தவன் இடைநிலை சீவன் ஆவான்.

இவர்கள் நாய்கள்

87. நாண்இலான் நாய்நன்கு நள்ளாதான் நாய்ப்பெரியார்ப்
பேணிநலன்நாய் பிறர்சேநவகன் நாய்-ஏண்இல்
பொருந்திய பூண்மலையார் சேரிகைத்து இல்லான்
பருத்தி பகர்வுழி நாய்.

விளக்கவுரை

பிறர் பழிக்கு ஆளாகும் செயல்களை செய்ய வெட்கப் படாதவன் நாய் போன்றவன். நல்லவர்கள் நட்பை விரும் பாதவன் நாய் போன்றவன். பெற்ற தாய், தந்தை, பெரியோர் ஆகியோரை பணிந்து காக்கத் தவறியவன் நாய் போன்றவன். மற்றவர்களுக்குப் பணியாளாக, ஊழியம் செய்து வாழ்கிற வன் நாய், பூண் அணிந்த மார்புகளை உடைய விலை மகளிர் வசிக்கும் தெருவில் கைப்பொருள் ஒன்றும் இல்லாதவன் போய் நிற்பது. பருத்தி விற்கும் இடத்திற்கு போய் நிற்கும் நாய்க்கு சமமானவன். பருத்தி விற்கும் இடத்தில் நாட்டுக்கு வேலை இல்லை அங்கு அதற்கு எதுவும் கிடைக்காது. அதுபோல் கைபொருள் ஒன்றும் கொடுப்பதற்கு இல்லா தவன் காசுக்கு உடல் விற்கும் வேசிகள் வாழும் தெருவில் போய் நிற்பது பயனற்றது. இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

இட்ட-ஏற்படுத்தப்பட்டன. இடையாய-இடை நிலையில் உள்ள சீடன். சீடன் கணிதநூல், யாழிசை, சந்தனம் அளாத்தல், இலை நறுக்குதல், எண்ணுதல் (பூசைக்கு) இவை அறிந்தவன் இடைநிலை சீவன் ஆவான்.

எளியது எது? அரியது எது...?

88. நாண்எளிது பெண்மைநகை எளிது நட்டானேல்
ஏண்எளிது சேவகனேல் பெரியோர்-பேண்எளிது
கொம்பு மறைக்கும் இடையாய் அளியன்மீது
அம்பு பறத்தல் அரிது.

விளக்கவுரை

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு பெண்மைக்குரிய இயல்புகள். ஆகவே, ஒரு பெண் நாணம் உடையவளாக இருப்பது அரிய செயல் அல்ல. அது போலவே நட்புக் கொண்ட இருவருக்கிடையே சிரிப்பு எளியது. சேவ கம் செய்பவன் என்றால் அவன் வலிமை பெற்றிருப்பது இயல்பு.

நற்குணம் கொண்ட சான்றோர்க்கு பிறரைப் பேணி காத்தல் எளிது. வஞ்சிக் கொம்பை மறைக்கும் மென்மையான இடையை உடையவளே. எவரிடமும் அன்பு பாராட்டும் ஒருவன் மேல் எவரும் பகை கொண்டு அம் பெய்தல் (எளி தல்ல) அரிதாகும். இப்பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

நாண்-வெட்கம். நகை-சிரிப்பு. நட்டானேல்-நண்டன் எனில். ஏண்-வலிமை. சேவகன்-போர் வீரன். பேண்-காப்பாற்றுதல். அளியன்-அன்பு.

இனிமையான சொல் உறவை வளர்க்கும்! வன்சொல் பகைமையை வளர்க்கும்!

89. இன்சொலால் ஆகும் திகளைமை இயல்பில்்லா
வன்சொல்லின் ஆகும் கைமைமன்-மென்சொல்லின்
ஒய்வுஇல்லா ஆர்அருளாம்அவ் அருள்நான் மனத்தால்
வீவுஇல்லா வீடாய் விடும்.

விளக்கவுரை

அன்போடு இனிய சொற்களை பேசுவதனால் உறவுமுறைகள் வளரும். தன்மையற்ற சுடு சொற்களைப் பேசுவதால் பகை உணர்வே வளரும். மென்மையான சொல்லால் பெருமையும் நீங்காது நிறைந்த அருள் குணமும் உண்டாகும். அவ்வருள் குணம் கொண்ட நல்ல மனத்தால் அழிவில்லாத வீடு பேறு உண்டாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது. நல்ல குணம், நல்ல மனம் ஆகியவற்றால் பிறவிப் பிணி நீங்கி நிலையான வீடு, பேறு கிடைக்கும் என்ற இப்பாடல் கூறுகிறது.

வீடு, பேறு என்றால் என்ன? நாம் தெய்வத்தின் கூறுகள் என்பதை அறிந்து தெய்மாகவே மாறுவதுதான் வீடு, பேறு. நாம் அனைவரும் தெய்வ வடிவங்களே. ஆனால் அதை மறந்த நிலையில் இருக்கிறோம். நற்செயல்களை செய்ய, செய்ய மறதி என்கிற திரை அகன்று தெய்வ வடிவமே நாம் என்ற உண்மை புரியும். நமக்கு மானம் இல்லை. பிறப்பு, இறப்பு எதுவும் இல்லை. நடப்பது அனைத்தும் விளையாடல் அவ்வளவுதான். நம்முடைய உண்மையான இயல்பு அன்பு, இரக்கம், கருணை ஆகிய நற்குணங்களே. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கிளைமை-உறவு. இயல்பு-தன்மை. வன்சொல்-சுடுசொல். மன்-பெருமை. ஓய்வு இல்லா-இடைவிடாத. ஆர்-நிறைந்த. அருள்-இரக்கம். ஆம்-அமையும். வீவு-அழிவு. வீடு-வீடு, பேறு.

அறிவற்ற மனைவி சுடுநெருப்பு

90. தக்கது இளையான் தவம்செல்வன் ஊண்மறுத்தல்
தக்கது கற்புடை யாள்வனப்பு-தக்கது
அழல்தண் என்தோளாள் அறிவிலள் ஆயின்
நிழல்கண் முயிறாய் விடும்.

விளக்கவுரை

இளம் வயதிலேயே ஒருவன் பற்றெல்லாம் விட்டு தவம் செய்ய தொடங்குவது நல்லதே. அதேபோல் செல்வம் நிறையப் பெற்றவன், அறுசுவை உண்ணக் கூடிய வசதி படைத்தவன் ஒருவேளை, அல்லது இருவேளை உணவை நோன்பு காரணமாக ஒதுக்குதல் நல்லது. அழகுடையப் பெண் பிற ஆடவர்மீது மனம் கொள்ளாமல் கற்பொழுக்கம் காத்தல் நல்லது. ஆனால், குளிர்ந்த தோள்களை உடைய ஒருத்தி அறிவற்றவளாய் ஒருவனுக்கு வாழக்கைத் துணை யானால் அவன் அவளுக்கு நெருப்புபோல் துன்பம் தருபவள் ஆவாள். எப்போதும் கடிக்கின்ற எறும்புபோல் வாழ்க்கை முழுவதும் துன்பம் தருவாள் என்பதாகும்.

அ.பொ.

ஊண்-உணவு. வனப்பு-அழகு. அழல்-நெருப்பு. தண்-குளிர்ச்சி. நிழல்-மாநிழல். முயிறு-மரங்களில் காணப்படும் செவ்வெறும்பு. சுறுக்கி என்றும் இதைச் சொல்வர். அறிவில்லாத மனைவியோடு வாழ்தல். நெருப்பு நிழலில் எறும்பு என்றது. நெருப்பை விட்டு விலக்கவும் முடியாது. (மனைவி என்பதால்) நெருங்கவும் முடியாது என்பதாம்.

இவை உண்மையல்ல...

91. பொய்யால் சுவர்க்கம் வாயால்நிரயம் பொருள்
மைஆர் மடந்தையால் வாழ்வினிது-மெய்அன்றால்
மைத்தக நீண்ட மலர்க்கண்ணாய் தீதன்றால்
எத்தவ மானும் படல்.

விளக்கவுரை

பொய்யான வழிகளில் செல்வதால் மேலுலக வாழ்வு வரும் என்பது உண்மையல்ல. மெய்யான வழிகளில் நடந்தால் நாகம் கிடைக்கும் என்பதும் உண்மையல்ல. மேலான செல்வத்தால் மேலான வாழ்வும், விலை மகளிரால் இன்ப வாழ்வும் கிடைக்கும் என்பதும் உண்மையல்ல. மை தீட்டப் பட்ட அருள் நோக்குடைய நீண்ட மலர்போல் கண்களுடை யப் பெண்ணே. ஏதாவது ஒன்றில் மனம் ஒன்றி (தவம் முத லானவற்றில்) செயல்படுவது நல்லது. இப்பொருளில் இப் பாடல் உள்ளது.

அ.பொ.

நிரயம்-நாகம். மை-குற்றம். ஆர்-பொருந்திய. மடந்தை-விலைமகள். மை-கண்மை. தக-அவனுடைய. எத்தவமாயினும்-எந்த நல்முயற்சி ஆனாலும். படல்-ஈடுபடல்.

இல்லறமா...? துறவறமா...?

92. புல் அறத்தின்நன்று மனைவாழ்க்கை போற்றுடைத்தேல்
நல் அறத்தாரோடு நடக்கலா-நல்அறத்தார்க்கு
அட்டுஇட்டு உண்டு ஆற்றவாழ்ந்தார்களே இம்மையில்
அட்டுஇட்டு உண்டாற்ற வாழ்வார்.

விளக்கவுரை

மனைவியுடன் இல்லறம் நடத்தி வாழ்வதான் இல் வாழ்க்கைப் பொருந்திய இல்லறம், துறவறம் என்னும் இரண்டில் நல்லது... பலராலும் பாராட்டப்படுமானால் இல்லறம் நல்லது. அது துறவறத்திற்கு ஒப்பாகும். துறவு வாழ்க்கை மேற்கொண்டவர்களுக்கு சமைத்த உணவை படைத்து தாமும பகிர்ந்துண்டு இனிதே முற்பிறவியில் வாழ்ந்தவர்களே இப்பிறவியில் உணவு சமைத்து பிறர்க்கு கொடுத்து தாமும் உண்டு மகிழ்வோடு வாழ்கின்றனர். ஆகவே, இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தால் அந்த வாழ்க்கை தானாகவே நம்மை சுவர்கத்தில் சேர்த்து விடும். சுவர்க்கம் என்பது நம் உண்மையான தெய்வ வடிவை அறிந்து நிலையான பேரானந்தத்தில் திறைப்பதாகும்.

அ.பொ.

புல்-பொருந்திய. அட்டு-சமைத்து. இட்டு-படைத்து. உண்டு-பகிர்ந்துண்டு. ஆற்ற-மிகுதி.

உயர்கதி பெறவேண்டுமா?

93. ஈவது நன்றுதீது ஈயாமை நல்லவர்
மேவது நன்று மேவாதாரோடு-ஓவாது
கேட்டுத் தலைநிற்க கேடில் உயர்கதிக்கே
ஒட்டுத் தவநிற்கும் ஊர்ந்து.

விளக்கவுரை

பிறருக்கு அவர் வேண்டிய அல்லது விரும்பிய பொருளைத் தருவது நல்லது. பிறருக்கு கொடுத்து உதவமாமல் இருப்பது தீமையாகும். நல்லலவர்கள் தம்மோடு, சேராதவர்களுடன் சேர்ந்தாற்போல் இருப்பது நல்லது. (இதனால் அவர்கள் செய்ய எண்ணும் தீமைகளில் இருந்து நல்லவர்கள் தப்பலாம்). இடையீடுயின்றி தொடர்ந்து நல்ல நீதி நூல் பெருமைகளைக் கேட்டு அதன்படி நடந்தொழுகுதல் நல்லது. இப்படியெல்லாம் நடந்தால் அழிவற்ற தான் உயர்ந்த வீட்டின்ப நெறிக்கு விரைந்து செல்ல அதுவே வழியாகும். இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

அ.பொ.

மேவது-சேர்ந்திருப்பது. மேவாதாரோடு-பொருந்தாதவரோடு. ஓவாது-இடைவிடாமல். தலை நிற்க-அதன்படி நடக்க. கேடு இல்-அழிவில்லாத. ஒட்டும்-செலுத்தும். தவ-மிகவும். ஊர்ந்து-செலுத்தி.

இது போலி தவ வேடம்

94. உண்இடத்தும் ஒன்னார் மெலிவிடத்தும் மந்திரம்கொண்டு
எண்இடத்தும் செல்லாமை தான்தலையே-எண்ணி
உரைப்பூசல் கோறல் உயர்தவம் மேல்கங்கைக்
கரைப்பூசை போற்றக் கடை.

விளக்கவுரை

பிறர் உணவு கொள்ளும் இடத்திலும், பகைவர் வலிமை குன்றி தாழ்ந்துள்ள நிலையிலும், பெரியோர்கள் கூடி மந்திராலோசனை செய்ய எண்ணி இருக்கிற இடத்திலும்

போகாமல் இருத்தல் உயர் ஒழுக்கமாகும். ஆராய்ந்து பார்த்தும் பேசும் பேச்சில் பகை, பிணக்கு உண்டாக பேசுவதும் உயர்ந்த தவவாழ்வை மேற்கொண்டிருக்கும். காலத்தில் ஒரு உயிரைக் கொன்று தின்னாலும் ஆராய்ந்து பார்த்தால் கங்கை நதிக்கரையில் உட்கார்ந்திருக்கும். பூனையைப் போன்ற கீழ்பட்ட செயலாகும். அதாவது போலி தவவேடமாகும்.

அ.பொ.

உண் இடம்-உணவு கொள்ளும் இடம். ஒன்னார்-பகைவர். மெலிவிடத்து-வலிவு குன்றி இருந்தபோது. மந்திரம் கொண்டு-இரகசிய ஆலோசனை மேற்கொண்டு. எண்-எண்ணும். தலை-சிறந்தது. எண்ணி - நினைத்துப் பார்த்து. உரை-பேச்சு. பூசல்-சண்டை. பூசை-பூனை. போற்ற-ஆராய்ந்தால். கடை-இழிசெயல்.

இறந்த பிறகே மதிக்கப்படுவர்

95. பத்தினி சேவகன் பொத்தில் கடுந்தவசி
பொத்தில் பொருள்திறத்துச் செவ்வியான்-பொத்தின்றி
வைத்தார் அதுவழக்கும் சான்றவர் தம்செம்மை
செத்தால் அறிக சிறந்து.

விளக்கவுரை

கற்புடைய பத்தினிப் பெண், போர் வீரன் குறையில்லாத அரிய தவத்தை மேற்கொண்டிருக்கிற துறவி. குற்றமில்லாத செல்வ செழிப்பில் மேலோங்கி இருப்பவன். குற்றமின்றி முதல் நிலையில் வைக்கப்பட்ட சான்றோர் ஆகியோரது பெருமை இறந்த பிறகே பெரிதும் பாராட்டப்படும் என்று இச்சிறுபஞ்சமூலம் பாடல் கூறுகிறது.

பத்தினிப் பெண்ணான கண்ணகி இல்வாழ்க்கை நடத்தும் போது சாதாரணப் பெண்ணாகவே மதிக்கப்பட்டாள். அவன் கணவன் கோபலன் அவளை விட்டுப் பிரிந்து மாதவியிடம் வாழ்ந்தபோதுகூட அவள் பொறுமை குணம் கொண்டவள் என்ற அளவிலேயே அவளை நினைத்தார்கள். ஆனால், பொற்கொல்லன் சூழ்ச்சியால் தன் கணவன் கள்வன் என்று குற்றம் சுமத்தப்பட்டு கொலை உண்டான் என்று கேள்விப்பட்ட நிலையில் அவள் பெண்டிலி போல் மாறினாள். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உண்மையை

புரிய வைத்தான். மன்னன் தலை மடிந்தது. அதைக் கண்ட கோப்பெருந்தேவியும் சாய்ந்தான். மதுரை எரிந்தது. அவனும் மறைந்தான் அவர் மறைந்த பிறகுதான் கண்ணகிக்கு கோயில் எடுத்தார்கள். கற்புக்கரசி கண்ணகி என்று எல்லோரும் பாராட்டினார்கள். ஆகவே, இறந்த பிறகுதான் சிலரின் ஆற்றல் உலகத்தவரால் போற்றப்படுகிறது என்பதற்கு கண்ணகி வரலாறு சான்றாக உள்ளது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடலே அமைந்துள்ளது.

அ.பொ.

பொத்துஇல்-குற்றம் இல்லாத. பொருட்திறம்-செல்வச் சிறப்பு பொத்தில் பொருட் திறம் என்பது அடைக்கலம் பொருளை கவர்ந்து கொள்ள எண்ணாது காப்பாற்றி உரியவரிடம் ஒப்படைப்பது. செல்வி யான்-செம்மையான குணம் உடைய மேலோன். பொத்தின்றி-குற்றம் அற. வைத்தார்-மேல்நிலையில் வைக்கப்பட்டவர். வழக்கு-பெருமை. சான்றவர்-பெரியோர். செம்மை-மேலான,தன்மை. செத் தால்-இறந்தால். அறிக சிறந்து-நன்றாக அறிவாய். இவர்கள் பெருமை இவர்கள் செத்த பின்னரே அதிகம் வெளிப்படும் என்பது குறிப்பு.

உய்யும் வழி என்ன?

96. வழிபடரல் வாயல் வருந்தாமை வாய்மை
குழிப்படரல் தீச்சொற்க ளோடு-மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துஉயக் கற்றவர்
ஆய்ந்து விடுதல் அறம்.

விளக்கவுரை

பழிபாவங்களிலிருந்து தப்பி பிழைக்க விரும்பும் கற்றறிந்த பெருமக்கள் மக்கள் நடக்கும் பாதையில் சென்று வழிப்பறி போன்ற துன்பத்தை வழி போர்க்களுக்கு செய்தல் கூடாது. இருளில் செல்லக்கூடாது. இது பல தீய செயல்களை செய்ய இடம் கொடுக்கும். பிறர் வருந்தும் தீய சொற்களை பேசக் கூடாது. பெரியோர்கள் கூறிய அற உரைகளை ஒதுக்கக் கூடாது ஆகிய இந்த ஐந்தையும் செல்வதே அறம் ஆகும். உய்யும் வழியும் அதுவே இப்பொருளில் இப்பாடல் உள்ளது.

பொதுவாக மக்களுக்கு தீமை செய்யக்கூடாது என்பது சிறுபஞ்சமூலம் பாடல்களில் வந்திருப்பதை நாம் அறியலாம்.

மக்களுக்கு நாம் தீமை என்ன செய்யக் கூடாது? நாம் வேறு. அவர்கள் வேறு அல்ல. இந்த வேறுபாடுதான் எல்லா துன்பங் களுக்கும் காரணம் ஒருவருக்கு தீமை செய்தால் அது நம் மிடமே திரும்பி வருகிறது என்று சொல்கிறோம். ஏன் அப்படி ஆகிறது...? நமக்குள் இருக்கும். தெய்வ ஒளிதான் மற்றவர்க ளிடமும் இருக்கிறது. விலங்கினங்கள், பறவைகள் போன்ற எல்லா உயிர்களிலும் அந்த தெய்வஒளி இருக்கிறது. அதனால் தான் பிறஉயிர்களைக் கொன்று அந்த மாமிசத்தை உண்ணக் கூடாது என்று சிறுபஞ்சமூலம் பலப் பாடல்களில் கூறுகிறது.

அந்த தெய்வ ஒளியைத்தான் ஆத்ம ஒளி என்றும் அழைக்கிறோம். மற்றவருக்கு செய்யும் தீமை நமக்கு நாம் செய்து கொள்ளும் தீமையாகும். சுவற்றில் எறியப்பட்ட பந்து மீண்டும் நம்மிடமே வருவதுபோல் நாம் பிறருக்கு செய்யும் நன்மை, தீமைகள் பல மடங்கு பெருகி நம்மிடமே திரும்புகின்றன. இப்பேருண்மையை அறிந்து கொண்டால் மற்றவர்களுக்கு தீமை செய்யும் எண்ணம் நமக்கு வராது. நாம் அனைவருமே தெய்வ ஒளிகள். நமக்கு மரணமோ, பிறப்போ, இறப்போ இல்லை. அப்படி யென்றால் நாம் ஏன் துன்பம் அடைகிறோம். பிறருக்கு துன்பம் செய்யும் நிலையை ஏன் அடைந்தோம்?

நீதி நூல்கள் வாயிலாக அதை நினைவுக்குக் கொண்டுவர வேண்டிய கடில் ஏன்வந்தது என்று கேட்கலாம் இவ்வினாக் களுக்கு சரியான பதில் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அமுதம் கிடைக்கவில்லை என்பதற்காக சாக்கடை யில் விழவேண்டியதில்லை. ஆகவே, பெரியோர்கள் கூறிய அறிவுரைப்படி வாழ்க்கைப் பயணத்தை செலுத்தி நாம் முடிக்க வேண்டும். இதுவே உய்யும் வழி இச் சிந்தனை களைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

வழிபடரல்-வழியில் துன்பம். வாய்அல்-வாய்த்த இருள். வாய்மை - உண்மை. குழிப்படரல்-தாழ்த்துதல். பொழிப்பட்ட-கற்றவர் மொழிந்த கூறிய. காய்ந்து-வெறுத்து. ஆய்ந்து-ஆராய்ந்து. விடுதல்-விட்டு விடுதல்.

பாயிரம்

ஆசிரியர் பற்றிய விளக்கம்

97. மல்லிவர்தோள் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினால்-கல்லா
மறுபஞ்சம் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலம் செய்தான்.

விளக்கவுரை

மற்போரை விரும்பிச் செய்யும் தோள் வலிமயுடைய மாக்காயன் என்பவரின் மாணவன் (காரியாசான் சிறுபஞ்ச மூலம் நூலை ஆக்கியவர்) நாட்டில் உள்ள பல கோடி மக்களின் அறியாமையாகிய நோயை நீக்கும் பொருட்டு... கல்வி அறிவு பெறாததாகிய குற்றம் என்றும் இந்த பஞ்சம் தீர மழை போல் ஈகை குணம் கொண்ட மேலோனாகிய காரியாசான் சிறுபஞ்சமூலம் என்னும் நூலை செய்தருளி யுள்ளான். இப்பொருளில் இப்பாயிரம் பாடல் விளங்குகிறது.

கவி காரியாசானின் ஆயிரம் மற்போரில் சிறந்தவர் என்பதை இதன் மூலம் அறிகிறோம். கோடிக்கணக்கான மக்களின் அறியாமையை போக்க சிறுபஞ்சமூலம் காரி யாசான் தந்ததாக கூறப்பட்டது. அந்த அறியாமை என்ன? இன்றைய உலகத்தில் மனிதர்கள் ஒழுக்கம் கெட்டு வாழ்கி றார்கள். பிறர் பொருளை கவர பல சூழ்ச்சிகள் செய்கிறார்கள். கள் அருந்துகிறார்கள். விலை மகளிரை விரும்புகிறார்கள். தான் வாழ பிறரை கெடுக்கிறார்கள். பொய் பேசுகிறார்கள் வஞ்சகம் செய்கிறார்கள். செய்நன்றி மறக்கிறார்கள். துரோ கம் புரிகிறார்கள். பொற்றோரைத் தவிக்க விடுகிறார்கள். பெரியோர்களை அவமதிக்கிறார்கள். இந்த குற்றங்கள் காரணமாக பிறவிகள் தோறும் துன்பம் எனும் நாகத்தில் விழுகிறார்கள். இதுதான் அறியாமை. கஸ்தூரி மான் என்ற ஒருவகை மான் உண்டு. அதன் கொம்புகளில் நறுமணம் கமழ்கிறது. ஆனால், அந்த மானுக்கு அது தெரிவதில்லை. அந்த நறுமணம் வெளியிலிருந்து வருவதாக அது நினைக் கிறது. காலம் செல்ல, செல்ல அந்த நறுமணம் வெளியில் இருந்து வரவில்லை. தன் கொம்புகளிலிருந்தே வருகிறது என்பதை அது புரிந்து கொள்கிறது.

அதேபோல் மனிதர்கள் தங்களுக்குள்ளே இருக்கும் தெய்வ ஒளியை அறிந்து கொள்ளாமல் அச்சத்தின் பிடியில் சிக்கி துன்பம் அடைகிறார்கள். சகல ஆற்றல் இருந்தும் பலவீனர்களைப்போல் நடைப் பிணங்களாக உலவுகி றார்கள். இந்த அறியாமையைப் போக்க பாதை அமைப்பது போல கவிகாரியாசான் அவர்கள் சிறுபஞ்சமூலம் என்னும் இவ்விலக்கியத்தை தந்திருக்கிறார். மற்றவர்களுக்கு தீமை செய்யக்கூடாது. பொய் சொல்லக் கூடாது. பிறர் பொரு ளுக்கு ஆசைப்படல் கூடாது என்று தமது பாடல்களில் அவர் கூறியிருப்பது நம் லட்சியத்திற்கு பாதைகளாகும். இதைப் புரிந்துகொண்ட பிறகு தியானம்... யோகம்... முதலான பயிற்சிகள் செய்து நம் தெய்வத் தன்மையை வெளிப்படுத்தியாக வேண்டும். பாயிரம் பாடலில் இந்த பொருள்தான் அடங்கியிருக்கிறது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாயிரம் பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

மல்-மற்போர். இவர்-விரும்பும். மாநிலம்-நாடு, உலகம். பல்லவர் - பலவான மக்கள். பாங்கு-தன்மை. கல்லா-படிப்பில்லா. மறு-குற்றம். பஞ்சம்-வறட்சி. மழைக்கை-மழை போல் வளமை. சிறுபஞ்ச நூல் செய்தான்-இயற்றினான்.

கொடுப்பதன் பயன்

98. அச்சம் ஆயும்கால் நன்மை அறத்தொடு
கூச்சல்இல் கைம்மாறு அருள்ஐந்தால்-மெச்சிய
தோகை மயில்அன்ன சாயலாய் தூற்றுங்கால்
ஈகை வகையின் இயல்பு.

விளக்கவுரை

தோகை மயில் போன்ற அழகுடையப் பெண்ணே... ஆராய்ந்து பார்க்கும் போது எவரையும் தாழ்த்தாது சமமாக நடத்த வேண்டும். நன்னெறியில் நிற்கவேண்டும். வியாபார நோக்கமின்றி பிறருக்கு கொடுத்துதவ வேண்டும். இரக்க குணம் வேண்டும். இந்த குணங்கள் தான் பெரும் பயன் விளைக்கும். இங்கே பயன் என்பது மண்ணுலகில் நீண்ட காலம் வாழ்வது அல்ல. அப்படி வாழ்ந்தாலும் முடிவில் மரணம் தானே...?

இந்த சுழற்சி தேவையில்லை. நாகமாகிய பிறவித் துன்பம் முடியவேண்டும். நம்முடைய உண்மையான வடிவம் தெய்வ வடிவம். நமக்கு மரணம் இல்லை. அச்சம் எதுவும் இல்லை. நாம் அனைவரும் அழியாத போராளிகள். இதை உணர்வது தான் பயன். நற்குணங்களை பெற்றிருப்பதால் விளையக் கூடிய பயன் இதுவே. வேறு எந்த பயனும் நிலைக்காது. நாம் தெய்வ ஒளி என்கிற உண்மை தத்துவத்தை மறக்கக்கூடாது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

அச்சம்-சரிசமம். சச்சல்-வணிகம். கைம்மாறு-எதிர்உதவி. அருள்-இரக்கம்.

கோடிகோடியாக பெறும்வழி

99. கைம்மாறும் அச்சமும் காணின் பயம்இன்மை
பொய்ம்மாறு நன்மை சிறுபயம் மெய்ம்மாறு
அருள்கூடி ஆர்அறத்தோடு ஐந்துஇயைந்து ஈயின்
பொருள்கோடி எய்தல் புகன்று.

விளக்கவுரை

பிறருக்கு பயன் கருதாது உதவுதல். எவரையும் தாழ்த் தாமல் சமமாக நடத்தல். தீயன கண்டு ஒதுங்குதல், பொய் யாமை, வாய்மை, இரக்கம் என்ற ஐந்து ஒழுக்கங்களை கடைபிடித்து வாழ்பவர் கோடி, கோடியாக பொருள் பெற்று வாழ்வாங்கு வாழ்வர் என்று இப்பாடலின் பொருள் உள்ளது.

மேலே குறிப்பிட்ட நற்குணங்களைப் பெற்றிருந்தால் கோடி, கோடியாக பொருள் வரும் என்பதுமட்டுமல்ல. அது மட்டுமல்ல அத்கையவர்களின் மரணமிலா வாழ்க்கைக்கு இந்த நற்குணங்கள் படிகளாக அமைகின்றன. சிறுபஞ்ச மூலத்தின் விளக்கவுரையின் சிறப்பே இந்த பேருண்மையை ஆங்காங்கே நினைவுபடுத்தியிருப்பதுதான். நற்குணங்கள் தீயவினைகள் என்ற விலங்குகளை உடைத்து எறிகின்றன. அதேசமயம் புண்ணியம் நல்வினை என்ற தங்க விலங்கையும் நாம் உடைத்தெறிய வேண்டும். அதாவது தீவினைகளை மட்டுமல்ல... நல்வினைகளையும் தாண்டி நாம் செல்ல

வேண்டும். அதுவே தெய்வம் வாழும் இடம். நாம் இறைவ னின் கூறுகள். நாம் எல்லாவற்றையும் தாண்டிய போராளிகள். மரணத்தை வென்றவர்கள். அந்த லட்சியத்திற்கு சிறுபஞ்ச மூலம் பாடல்கள் படிகளாக அமைந்திருக்கின்றன. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந் துள்ளது.

அ.பொ.

கைம்மாறு-உதவி. அச்சம்-சமம். பொய்மாறு-பொய் பேசுதல். மெய்மாறு-உண்மை பேசுதல். அருள்-இரக்கம். ஆர்-பொருந்த. இயைந்து-சேர. ஈயில்-கொடுத்தால்.

பொய் சொல்லக் கூடாது...

100. **இம்மை நலன்அழிக்கும் எச்சம் குறைபாடுக்கும்
அம்மை அருநரகத்து ஆழ்விக்கும்-மெய்ம்மை
அறம்தேயும் பின்னும் அலர்மகளை நீக்கும்
மறந்தேயும் பொய்உரைக்கும் வாய்.**

விளக்கவுரை

பொய் சொல்லக்கூடாது. மறந்தும்கூட பொய் சொல லக் கூடாது. பொய் என்பது இப்பிறப்பு இன்பங்களை அழிக்கும். புகழைக் கெடுக்கும். கொடிய நரகத்தில் தள்ளும். அறச் செயல்களை அழிக்கும். உண்மையை உருக்குலையச் செய்யும். தாமரை மலரில் வாசம் செய்யும் மகாலட்சுமியை நீங்கச் செய்யும். ஆகவே, பொய் கூறக்கூடாது. அரிச்சந்திரன் உண்மைக்காக நாட்டைத் துறந்தான். மனைவி, மகன் ஆகியோரைத் துறந்தான். நாடாண்ட சக்கரவர்த்தியான அவன் இடுகாடு காத்தான். ஆனால், உண்மையை துறக்க வில்லை. அதனால் அழியாப் புகழ் பெற்றான். வாய்மையே எல்லா பெருமைக்கு காரணம் என்பதை இப்பாடல் உணர்த்து கிறது.

அ.பொ.

இம்மை-இப்பிறவி. எச்சம்-புகழ். அம்மை-அடுத்த பிறவி. அலர் மகள்-தாமரை மலரில் வாழும் திருமகள், (மகாலட்சுமி).

☐ ☐ ☐

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

“திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்.”

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

“நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்.”

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

“பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!”

– கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்

“நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து ‘ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது’ எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா.”

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,

கிராமிய இசைக் கலைஞர்.